பக்கங்கள் : எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2037 மார்கழி 10 திங்கட்கிழமை (25.12.2006) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 30

# திருகோணமலை மாவட்டம் இனி அரசின் நேரடி நிர்வாகத்தின் கீழ்

## வடக்கு, கிழக்கு மாகாண சபைகள் தனித்தனியாக இயங்கத் தொடங்கின

யாழ்ப்பாணம், டிசெம்பர் 25

**திருகோணமலை மாவட்டம் அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவரப்படும் என்றும்- மாகாண சபையின் அதிகாரத்துக்கு உட்பட்டதாக இருக்க மாட்டாது என்றும் - விடயமறிந்த வட்டாரங்களில் இருந்து நம்பிக்கையாகத் தெரியவந்துள்ளது.**

**வடக்கு - கிழக்கு மாகாண சபை பிரிக்கப்பட்டு, வடக்கு மாகாண சபை கிழக்கு மாகாண சபை என்று தனித்தனியாக உத்தியோக பூர்வமாக நேற்றுமுன்தினம் 23 ஆம் திகதியிலிருந்து இயங்கத் தொடங்கிவிட்டதாகவும் அறியவந்துள்ளது.**

திருகோணமலை மாவட்டத்தை அபிவிருத்தி செய்து ஒரு வர்த்தக நகரமாக்கும் உத்தேசத்துடனேயே அதனை கொழும்பு அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தின் கீழ் கொண்டுவருவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக அறியப்படுகின்றது.

அதனாலேயே திருமலையை கிழக்கு மாகாணசபை நிர்வாகத்துக்குள் உட்படுத்தாமல் தனி நிர்வாக அலகாக்கும் யோசனை முன்னெடுக்கப்படுவதாக விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

திருமலை அபிவிருத்திக்கென தனியான அமைச்சு ஒன்றை உருவாக்கவும் அரசாங்க உயர்மட்டத்தில் ஆராயப்பட்டு வருவதாக மேலும் தெரியவருகிறது.

இதேவேளை-

தனித்தனியாக பிரிக்கப்பட்ட கிழக்கு மாகாண சபையும் வடக்கு மாகாண சபையும் உடனடியாக முறையே வவுனியாவிலும் அம்பாறையிலும் அமைக்கப்பட மாட்டா என்றும் சிறிது காலத்துக்கு இப்போதுள்ள உவர்மலைப் பகுதியிலேயே இயங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**தனித்தனியாக இயங்க ஆரம்பித்தன**

வடக்கு மாகாண சபையும் கிழக்கு மாகாண சபையும் சனிக்கிழமை தொடக்கம் இயங்க ஆரம்பித்தன.

கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக நியமல் (08ஆம் பக்கம் பார்க்க)




## நள்ளிரவுத் திருப்பலியில் ஆர்வத்துடன் பக்தர்கள்

யாழ்ப்பாணம், டிசெ. 25

கிறிஸ்து பிறப்பை ஒட்டி தேவாலயங்களில் நேற்று நள்ளிரவு இடம்பெற்ற நள்ளிரவு திருப்பலிகளில் பெரும் எண்ணிக்கையானவர்கள் கலந்துகொண்டனர்.

யாழ். மரியன்னை தேவாலயத்தில் யாழ். ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் நள்ளிரவுத் திருப்பலியை நள்ளிரவு 11.45 இக்கு ஒப்புக்கொடுத்தார்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## இந்தியாவிலுள்ள ஜோர்தானியத் தூதருடன் கப்பல் கப்டன் கிளிநொச்சியிலிருந்து பேச்சு

### குடும்பத்தினருடனும் அதிகாரிகளுடனும் உரையாட மாலுமிகளுக்கு தொலைபேசி வசதி

முல்லைத்தீவுக் கடலில் தத்தளித்துக் கொண்டிருந்த ஜோர்தான் நாட்டுச் சரக்குக் கப்பலின் கப்டனான றமாஷ் எஸ்.அப்துல் ஜமார் நேற்றுமாலை கிளிநொச்சியிலிருந்து இந்தியாவிலுள்ள ஜோர்தானிய தூதருடன் தொலைபேசிமூலம் தொடர்பு கொண்டு பேசினார்.

குறித்த கப்பலின் மாலுமிகள் 25 பேரும் விடுதலைப் புலிகளால் பாதுகாப்பாக அழைத்துவரப்பட்டு கிளிநொச்சியில் தங்கவைக்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் கப்பலின் கப்டனான றமாஸ் எஸ்.அப்துல் ஜபார் ஈராக்கைச் சேர்ந்தவர். கிளிநொச்சியிலுள்ள விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்திலிருந்து இந்தியாவிலுள்ள ஜோர்தான் நாட்டுத் தூதருடன் தொலைபேசியில் அவர் பேசினார்.

கப்பலில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே அது தத்தளிக்கத் தொடங்கியது என்றும் அந்த நேரத்தில் விடுதலைப் புலிகளால் காப்பாற்றப்பட்ட தாமும் தமது மாலுமிகளும் தற்போது பாதுகாப்பாக இருக்கின்றனர் என்றும் கப்டன் ஜோர்தானியத் தூதருக்குத் தெரியப்ப

(08ஆம் பக்கம் பார்க்க)

## தெஹிவளையில் 4 இளைஞர்கள் கைது

கொழும்பு, டிச. 25

கொழும்பு - தெஹிவளைப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் நேற்று அதிகாலை 4 மணிமுதல் 8மணிவரை பொலிஸாரும், படையினரும் இணைந்து மேற்கொண்ட தேடுதல் நடவடிக்கை ஒன்றில் நான்கு இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

## முல்லைக் கடலுக்கு மீட்புக்குழுவை அனுப்பத் தயாராகிறது இராணுவம்

### கண்காணிப்புக் குழு மூலம் புலிகளுடன் தொடர்பு

கொழும்பு, டிசம்பர் 25

இயந்திரக் கோளாறு காரணமாக கடலில் தத்தளித்த நிலையில் விடுதலைப் புலிக்ளால் கரைசேர்க்கப்பட்டிருக்கும் ஜோர்தானியக் கப்பலையும், அதன் மாலுமிகள் 25 பேரையும் பாதுகாப்பாக மீட்டு வருவதற்காக மீட்புக் குழு ஒன்றை முல்லைத்தீவுக் கடலுக்கு அனுப்புவதற்கு இராணுவம் தயாராகி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

முல்லைத்தீவுக் கடலில் கப்பல் தரித்து நிற்கும் இடத்துக்கு அரச இராணுவத்தின் மீட்புக் குழுவினர் செல்வதற்கு வழிவிட்டு ஒத்துழைக்குமாறு கேட்டு இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழு அவசரமாகப் புலிகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கப்பலை விடுவிக்கும் விடயத்தில் சர்வதேசசட்டங்களை மதித்து நடக்கு

(08ஆம் பக்கம் பார்க்க)


கப்பல் கப்டன் செஞ்சிலுவை அதிகாரியுடன் கலந்துரையாடியபோது.....

## அமரர் வி.நவரத்தினத்துக்கு நாட்டுப்பற்றாளர் கௌரவம்

கிளிநொச்சி, டிச. 25

பழம்பெரும் ஈழத்தமிழ் அரசியல் தலைவர் அமரர் வி.நவரத்தினத்துக்கு தமிழீழ விடுதலைப்புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்கி மதிபபளித்துள்ளனர்.

தமிழ் மக்களின் விடிவிற்காக, தமிழ் தேசமொன்றின் மீள வருகைக்குமாக உழைத்த ஒரு உன்னத மனிதரை தமிழினம் இழந்து விட்டது. அமரர் வி.நவரத்தினம் அற்புதமான இலட்சியவாதியாகத் திகழ்ந்தார். தான் அணைத்துக்கொண்ட இலட்சியத்திற்காக நூற்றாண்டொன்று முழுவதும் தனது வாழ்வை அர்ப்பணித்தார் - என்று விடுதலைப் புலிகள் தெரிவித்துள்ளனர்.

கால வயோதிபத்தினால் இவரது உடல் தளர்ந்து போயிருந்தாலும் உள்ளத்தில் சுதந்திர உணர்வு நிரம்ப இளமை மிடுக்குடன் (08ஆம் பக்கம் பார்க்க)

## பயண அனுமதிப்படிவங்கள் புதன் முதல் பிரதேச செயலகத்தில் விநியோகம்

### யாழ்.அரச அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், டிச. 25

குடாநாட்டில் இருந்து கப்பல் மற்றும் விமானம் மூலம் வெளிமாவட்டங்களுக்குச் செல்வதற்கான பாதுகாப்பு அனுமதி பெறுவதற்கான படிவங்களை நாளை மறுதினம் புதன்கிழமை தொடக்கம் பிரதேச செயலர்கள் அலுவலகங்களில் பெறலாம்.

அரச அதிபர் கே.கணேஷ் இத்தகவலைத் தெரிவித்தார்.

படிவங்கள் அச்சிடும் வேலைகள் தற்சமயம் (08ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அபிவிருத்தி அதிர்ஷ்டம்
உத்தியோகபூர்வ முடிவுகள்

842 சிவப்பு

வெற்றி இலக்கங்கள்




**12 36 46 47**

**22-12-2006**

செல்லுபடியாகும் தொடர் இல. 5613650 - 5628021

ஜக்பொட் பரிசு ரூபா.8,241,425/- வெல்லப்படவில்லை

| இணையும் இலக்கங்கள் | வெற்றியாளர் எண்ணிக்கை | பரிசுத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|
| 1 இலக்கம் | 317,583 | 10/- | 3,175,830/- |
| 2 இலக்கங்கள் | 29,137 | 20/- | 582,740/- |
| 1 இல. + லக்கினம் | 28,761 | 30/- | 862,830/- |
| 2 இல. + லக்கினம் | 2,673 | 100/- | 267,300/- |
| 3 இலக்கங்கள் | 770 | 500/- | 385,000/- |
| 3 இல. + லக்கினம் | 74 | 5,000/- | 370,000/- |
| 4 இலக்கங்கள் | 04 | 100,000/- | 400,000/- |
| 4 இல. + லக்கினம் | - | 8,241,425/- | - |
| மொத்தம் | | | 6,043,700/- |
| முச்சக்கர வண்டிகளின் பெறுமதி | 5 | 204,700/- | 1,023,500/- |
| வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை | 379,007 | | 7,067,200/- |



இந்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுத் தொகை ரூபா 8,596,050/-

தொடர் இல.4748813 க்கு மேற்பட்ட நீல நிற டிக்கட்டுக்கள் 2006 டிசம்பர் 26 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை சீட்டிழுப்புக்குச் செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அபிவிருத்தி அதிர்ஷ்டம் சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் முச்சக்கரவண்டி வெற்றி பெறும் ஐந்து டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

| | |
|---|---|
| மட்டக்களப்பு | 5624730-5-95 |
| கம்பஹா | 5616032-5-43 |
| ஹம்பாந்தோட்டை | 5615534-1-78 |
| இரத்தினபுரி | 5617604-2-51 |
| கொழும்பு | 5627490-7-59 |

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
33, சென் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 03


## நாம் இழந்த நான்காண்டுகள்



*மண்ணில்* 01 * 10 * 1982

*விண்ணில்* 25 * 12 * 2002

### அமரர் சோபியா ஜொய்சி மகேந்திரன்

''அன்பு கமழும் மென்மையான அனுபவம் எல்லாம்
அழகு வாய்ந்த இனிமையான நினைவுகள் எல்லாம்
உன்னால் அன்றோ நாங்கள் கண்டோம்''

**''விண்ணுலக தந்தையுடன் முடிவிலா
வாழ்வில் சுகித்திருப்பாய்''**

*42, இராச வீதி,*
*நல்லூர்.*

(65014)

**பற்றிமா மகேந்திரன்**
**குடும்பத்தினர்.**

## நினைவுகளில் நீங்காத 5ஆம் ஆண்டு நினைவு கூர்ப்பு



*மனம் மகிழ* 18 * 09 * 1948

*மனம் நெகிழ* 18 * 01 * 2002

### திருமதி செல்லப்பா சாந்தகுமாரி

அன்போடும் பாசத்தோடும் எம்மோடு இணைந்து பண்புடன் வாழ்ந்த எம் இனிய அம்மாவே! நீங்கள் குடும்ப விளக்காக பிரகாசித்து நடமாடிய வீட்டில் படமாக காட்சியளிக்கின்றீர்கள். நீங்கள் எம்மை விட்டு மறைந்து போனாலும் உங்கள் நினைவுகள் என்றும் மாறாது.

*இல.59,கேசாவில் வீதி,*
*வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.* (65012)

**கணவர், மகன்,**
**மகள், மருமகள்.**

## மரண அறிவித்தல்

### சுவாமிநாதபிள்ளை மகேஸ்வரன்

(முன்னாள் யாழ்.பிரதம தபாலகம் D.S.)

தாவடியைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட சுவாமிநாதபிள்ளை மகேஸ்வரன் 21.12.2006 வியாழக்கிழமை கனடாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சுவாமிநாதபிள்ளை - இராசம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற நவரட்ணம் - சிவபாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும் ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும் பவானி, நளினி, நந்தினி, குமுதா, சுமதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் புவனேஸ்வரி காலஞ்சென்ற மகேஸ்வரி, இராவணேஸ்வரன் ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிகிரியைகள் 23.12.2006 சனிக்கிழமை கனடாவில் நடைபெற்றன. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

M.Rajeswary, 12,Marks Court,
Ajax Ontario, Canada LIT3N3,
T.P:0019056830256.

(63746)

தகவல்:
க.கோவர்த்தனராஜா
(சகலன்).


## விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள 3 Telephone Booth மற்றும் கணனி, கணனி உதிரிப்பாகங்கள் விற்பனைக்குண்டு.

**தொடர்பு:**
இல.72/28,Panikkar Lane,
Thirunalvely, Jaffna.T.P.: 021 4591871

## விற்பனைக்கு

SUZUKI GS125(Japan) மோட்டார் சைக்கிள் விற்பனைக் குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும்.
தொலைபேசி இலக்கம்
222 7084.

## வீடு விற்பனைக்கு

வெள்ளவத்தையில் ஹபிடல் லேனில் மிகவும் நவீன முறையில் கட்டி முடிக்கப்பட்ட வீடுகள் விற்பனைக்குண்டு. **Air Condition** இணைப்புகளும் உயர்தர **Architect** இனால் கட்டப்பட்ட **02 Bed Room, 03 Bed Room** வீடுகள் உள்ளன. உடனே குடி புகலாம், விலை 50 இலட்சத்திலிருந்து.

தொடர்புகளுக்கு:
0777 271222.


## கண்ணீர் அஞ்சலி

*யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியின்*
*பல்வேறு வளர்ச்சிப் பாதையில்*
*எம்முடன் கைகோர்த்து அயராது*
*உழைத்த எமது அன்புத் தோழன்*
*உமாகந்தனின் அன்புத் துணைவி*

### உமாகாந்தன் விஜயலட்சுமி

**அவர்களின் மறைவுக்கு எமது கண்ணீர் அஞ்சலிகளைச் செலுத்தவதோடு அவரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கின்றோம்.**

**யாழ்.தொழில்நுட்பக் கல்லூரி**
ந.யோகராஜன்
(அதிபர்/ பிரதி பிராந்தியபணிப்பாளர்),
உப தலைவர், பதிவாளர்,
பகுதித்தலைவர்கள்,
மாணவர் மன்றத்தினர்,
சிக்கன கடனு தவி சங்க தலைவர்,
செயலாளர், பொருளாளர்,
ஊழியர் சங்க தலைவர்,
செயலாளர், பொருளாளர்.

## கண்ணீர் அஞ்சலி



திருமதி
### ஜெகநாதன் சிவவதனி
(ஆசிரியர், கிளி/ உருத்திரபுரம் மகாவித்தியாலயம்)

தேடுகின்றோம்
உன்னை..
கனிந்த வாய் புன் சிரிப்புடன்
எங்கள் மீது அன்பைக் கொட்டிடவே
கதியின்றி தவிக்கின்றோம்
கனவல்ல எல்லாம் நிஜமே என்றறிவோம்
வார்த்தைகள் இன்றி தவிக்கின்றோம்
நெஞ்சில்
காணாது போனாலும் நினைவுகள்
எம்முடனே தான்.

(63743)

உருத்திரபுரம்,
கிளிநொச்சி.

அதிபர், ஆசிரியர்கள்,
ஊழியர்கள், மாணவர்கள்.

## மரண அறிவித்தல்

### திருமதி சூசையா றீற்றம்மா (றீற்றா)

(ஓய்வுபெற்ற தாதி)

இல.16, செபஸ்தியன் வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திருமதி சூசையா றீற்றம்மா (றீற்றா) நேற்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற யோசேப் எலிசபேத் தம்பதியரின் மகளும் சூசையாவின் அன்பு மனைவியும் ஜெயபாலன் (மட்டக்களப்பு), ஜெயறாமன்(சவூதி), ஜெயசிறி (கனடா), அருட்சகோதரி றெபேக்கா (ஜெயமதி), றெஜினா ஜெயநிதி ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்ற ஆசீர்வாதம் செபமாலை, நீக்கிலாப்பிள்ளை, பிலிப்பையா, முத்துத்துரை, அந்தோனிப்பிள்ளை, இராசமணி, யோசேப் பாக்கியம், யோசேவ் சவரிமுத்து ஆகியோரின் சகோதரியும் தேவி, சிசிலியா (மலர்), டேவிட்சன், குமார் ஆகியோரின் மாமியுமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் பற்றிய தகவல் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

16 செபஸ்தியன் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
ப.சூசையா
(கணவர்).

# மரண அறிவித்தல்கள்

### திருமதி தையல்நாயகி துரைச்சாமி



கொக்குவில் மேற்கு, லோட்டஸ் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தையல்நாயகி துரைச்சாமி 23.12.2006 சனிக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமியின் (ஓய்வுபெற்ற லிகிதர்) அன்பு மனைவியும் காலஞ்சென்ற துரைரத்தினம் (ஓய்வுபெற்ற பதிவாளர்), துரைநாயகம் ஆகியோரின் அன்புத் தாயும் இந்திராதேவி, நாகேந்திரராணி ஆகியோரின் மாமியும் துரேந்திரா, ரத்தினேந்திரா, மாலினி, யாழினி, றஜிகரன், நிவேர்தா, சுமித்றா,ஜீவிதன் , செல்வராஜா, கஜனி, மதனராஸ் ஆகியோரின் பேர்த்தியும் சாயந்தரி, ரேசாந், மதுஷினி, மதுக்கேஷ், மதுமிதன் ஆகியோரின் பூட்டியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.12.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் முற்பகல் 11 மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன்மணல் இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(65015)

தகவல்:
**து.துரைநாயகம்**
**(மகன்).**

### வைரமுத்து பொன்னையா

**(முன்னாள் கணக்காளர், குமரன் சில்க்ஸ் ,கொழும்பு - கஜமுகன்பான்சி ஹவுஸ் ,யாழ்ப்பாணம்)**



வேலணையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் மூத்தவினாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வைரமுத்து பொன்னையா நேற்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் முத்தமமாவின் அன்புக் கணவர் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று(25.12.2006)திங்கட்கிழமை மதியம் 2 மணியளவில் செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

*இல.30,மூத்தவினாயகர் வீதி,*
*2 ஆம் லேன், நல்லூர்.*

(65027)

தகவல்:
**செ.துரைராசா(சகலன்).**
**021 222 5548**

### சின்னத்தம்பி கந்தையா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி கந்தையா (இளைப்பாறிய இலங்கை தபால் திணைக்கள உத்தியோகத்தர்) காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - சின்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் மகேஸ்வரியின் (லண்டன்) அன்புக் கணவரும் சரஸ்வதி (ஜேர்மனி), இரட்னேஸ்வரி (கனடா), ஸ்ரீ தர்மமூர்த்தி (கனடா), கமலாசினி (லண்டன்), செம்பொற்சோதி ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருச்சிற்றம்பலம் (ஜேர்மனி), இராசதுரை (கனடா), கெங்காதரன் (லண்டன்), இராஜலக்சுமி (கனடா), சண்முகதாசன்( காவேரி சில்க்ஸ் உரிமையாளர்-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்பு மாமனும் பாலேந்திரன், சிந்துஜா, இரட்ணராஜ், சைலஜா, தனுஜா, லக்சன், ஜானகி, ராகவன், நிருஷா, சஜினி, வக்சலா, தர்மிலா, தினேஸ், ரமேஸ் ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2006) திங்கட்கிழமை இலக்கம் 320, ஆனந்தன் வடலி வீதியில் உள்ள அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*320, ஆனந்தன் வடலி வீதி,*
*அரியாலை.*

(65025)

தகவல்:
**ப. சண்முகதாசன்,**
காவேரி சில்க்ஸ் உரிமையாளர்,
48, பெரிய கடை, யாழ்ப்பாணம்.

### திருமதி விஜயலட்சுமி உமாகாந்தன்

அரியாலை, ஆனந்தன் வடலி வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி விஜயலட்சுமி உமாகாந்தன் நேற்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சிவகுருநாதன் சரஸ்வதி தம்பதியரின் கனிஷ்ட புதல்வியும் திரு.திருமதி சிவகுரு பரம்சோதி தம்பதியரின் மருமகளும் உமாகாந்தனின் (விரிவுரையாளர், உயர்தொழில்நுட்ப நிறுவனம்) மனைவியும் தர்சிகா, தனஞ்செயன்(பரியோவான் கல்லூரி மாணவன்) ஆகியோரின் அன்புத் தாயும் பாலசுப்பிரமணியம், திருமதி ஜெயலட்சுமி, திருமதி இராஜலட்சுமி, பாலகிருஸ்ணன், பாலசிங்கம், திருமதி பாக்கியலட்சுமி, பாலஇந்திரன், பாலச்சந்திரன்ஆகியோரின் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.12.2006)திங்கட்கிழமை பி.ப.2.30 மணியளவில் இல.74, ஆனந்தன் வடலி வீதியிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துப்பாத்தி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*,ஆனந்தன் வடலி வீதி,*
*அரியாலை.*

(65022)

தகவல்:
**உமாகாந்தன்(கணவர்).**

### நல்லதம்பி தம்பையா

*(சரவணை கிழக்கு, பள்ளம்புலம்)*



சரவணையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நல்லதம்பி தம்பையா நேற்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை அதிகாலை சரவணையில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லதம்பி - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்ற தம்பையா - சொர்ணம்மா தம்பதியரின் அருமை மருமகனும் அன்னம்மாவின் அன்புக் கணவரும் லோகநாதன் (பிரான்ஸ்), மலர்விழி, கயல்விழி, ரகுநாதன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராஜஸ்ரீகந்தராசா (அருள்), பரமானந்தம்,வனிதா (விஜி - பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமனும் மதிநாத், சுஜித்தா, றபித்தா, சதீஸ், சுஜீத், சுஜீபா, சுகந், துஷானி, பிரவீன், டுஷிக்கா, தர்மிகன், கிரிதரன் ஆகியோரின் அருமைப் பேரனும் காலஞ்சென்றவர்களான நாகரெத்தினம், தருமலிங்கம் மற்றும் இரத்தினம் ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற தங்கம்மா மற்றும் விசாலாட்சி, தியாகராசா, பூங்காவனம், அன்னபூரணி, யோகம்மா காலஞ்சென்ற சீவரெத்தினம் ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(25.12.2006) திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக சரவணை புன்னைகண்டி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரவணை பள்ளம்புலம்,*
*வேலணை.*

தகவல்:
மனைவி, மக்கள், தி.அருள் (மருமகன்),
சு.பரமானந்தம் (மருமகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நீதியான தீர்வினை முன்வைத்து போரை முடிவுக்குக் கொண்டுவரவேண்டும்

## யாழ். ஆயர் சவுந்தரநாயகம் விடுக்கும் நத்தார் செய்தி

கடந்த கால இரண்டு தசாப்த யுத்த அனுபவத்தில் பல கொடூர துன்புங்களைத் தமிழ்மக்கள் அனுபவித்திருந்தபோதும் இந்தத் தடவை ஏ-9 பாதை மூடப்பட்டமையால் அவர்கள் பெற்ற பன்முக வடிவத் தாக்கங்களின் அனுபவம் கடந்த கால அனுபவங்களைவிட பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளது என்ற வகையில் மிகவும் கொடூரமானது என்றே கூறவேண்டும். இந்த நிலை பற்றி நோர்வே மத்தியஸ்தக் குழுவினருக்கும் இணைத் தலைமை நாடுகளுக்கும் சர்வதேச சமூகத்திற்கும் வெளிநாட்டு தூதரகங்களுக்கும் உள்நாட்டில் சம்பந்தப்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் ஊடகங்களுக்கும் தெரிவித்தும் எந்தப் பயனும் ஏற்படவில்லை என்பது வருத்தத்திற்குரியதாகும்.

இலங்கையின் இரு பெரும்பான்மைக் கட்சிகளின் இணைவின் வழி அரசு தமிழ் மக்களுக்கு எந்தவிதமான தீர்வைத் தரப்போகின்றது என்பது இன்னும் ஐயத்திற்கு இடமாகவே உள்ளது. போரையும் அதன் வழியிலான தீர்வையும் அரசு முன்னெடுக்க விளைகின்ற வேளை மாவீரர் தின உரையில் விடுதலைப் புலிகளின் தலைவர் தெரிவித்திருக்கும் கருத்துகளும் போரையே நாடுவதாக அமைகின்றது.

தமிழ்மக்கள் போரை ஒருபோதும் விரும்பவில்லை. போர் அனுபவங்களால் உடல், உளரீதியில் தாக்கப்பட்டு யுத்தமற்ற பூமியில் அமைதியாக வாழவே விரும்புகின்றார்கள். நோர்வே மத்தியஸ்த குழுவும் இணைத் தலைமை நாடுகளும் மேன்மையான போக்கைக் கடைப்பிடித்து எதையும் இதுவரை சாதிக்கவில்லை. இனிவரும் காலத்தில் என்றாலும் இவர்கள் அரசை, பேசியவற்றை நடைமுறைப்படுத்தும்படி கட்டாயமாக நிர்ப்பந்திக்கும் வேளை விடுதலைப் புலிகளை எப்படியாவது பேச்சின் வழி நீதியான ஒரு தீர்வை முன்வைத்து போரை முடிவிற்குக் கொண்டுவருமாறு கட்டாயப்படுத்தவும் வேண்டும் என இலங்கை வாழ் தமிழ் மக்கள் அனைவர் பெயராலும் இலங்கையின் சுபீட்சமான எதிர்காலத்தை மனதில் கொண்டு வேண்டினோம். அவ்வேண்டுகோளை இந்த வேளையில் திரும்பவும் மீள வலியுறுத்த விரும்புகின்றோம். சம்பந்தப்பட்டவர்கள் எமது வேண்டுகோளை ஏற்று ஆக்கபூர்வ நடவடிக்கையில் உடன் இறங்கவேண்டுமென அழைப்பு விடுக்கின்றோம். இக்கட்டான இக்காலகட்டத்தில் பல்வேறுபட்ட துன்ப அனுபவங்களிலும் சுனாமியால் நமது மண்ணில் இறந்துபோனவர்களை நினைத்து அவர்களுக்காகவும் வேண்டுவோம்.



பல்வேறு துன்பதுயரங் அனுபவமத்தியில் மனச்சோர்வும் விரக்தியும் அடைந்து நிற்கும் தமிழ் மக்கள் அனைவருக்கும் பாலக இயேசுவின் பிறப்பு புது நம்பிக்கையையும் சமாதானத்தையும் கொண்டுவரவேண்டி நிற்கின்றோம்.

# பார்வையாளராகவே இருக்காமல் பொருத்தமான செயற்பாட்டில் ஈடுபடுக

## சர்வதேச சமூகத்தைக் கோருகிறார் தெ.இ. திருச்சபை ஆயர்

சர்வதேச சமூகம் பார்வையாளராக இராமல் நியாயமான தீர்வை ஏற்படுத்த பொருத்தமான செயற்பாட்டில் ஈடுபடவேண்டும் என்று தென்னிந்திய திருச்சபையின் ஆயர் அதிவண. கலாநிதி டி.எஸ்.தியாகராசா தமது கிறிஸ்மஸ் செய்தியில் கூறியுள்ளார்.

அவர் தமது செய்தியில் மேலும் குறிப்பிடுகையில்:-

இணைத்தலைமை நாடுகளோ,நோர்வே மத்தியஸ்த குழுவோ முனைப்புடன் காரியங்களை எடுத்துச் செல்லவேண்டிய கட்டாயத் தேவையுள்ளது. போரற்ற நிலை மாத்திரம் சமாதானத்தைத் தந்துவிட முடியாது. ஒவ்வொருவரும் தன்தன் நிலத்தில் வாழக்கூடியநிலை ஏற்படவேண்டும். தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் முடிவுக்குக் கொண்டுவரப்படல் அவசியம். எம்முடைய விளைச்சல் நிலங்கள் பயிர்ச்செய்கைக்கு உட்படுத்தப்பட்டு,மக்களின் பொருளாதார முயற்சிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படவேண்டும் நீதியுடன் கூடிய சமாதானம் ஏற்பட, வாழ்வின் முழுமை மக்களால் அனுபவிக்கப்பட அனைத்து வழிமுறைகளும் செய்யப்படல் அவசியம், சர்வதேச சமூகம் பார்வையாளராக இருக்காமல், மக்களது அல்லலைக் கண்ணுற்று அவற்றுக்கான நியாயமான தீர்வை ஏற்படுத்தப் பொருத்தமான செயற்பாட்டில் ஈடுபடவேண்டும். காலதாமதம் கடினப்பாட்டினையே கொண்டுவரும்.



ஒடுக்கப்பட்ட, வாழ்விழந்த மக்களுக்கு ஆறுதலையும், முழுமையையும் தரவே இறைமகனார் உலகத்தில் அவதரித்தார். இருளில் நடந்த மக்கள் இதனூடாகவே அவ்வருகையை வெளிச்சத்தின் செயற்பாடாகக் கண்டனர். மரணப் பிடியில் சிக்குண்டவர்களது கூக்குரலை இறைவன் கேட்டார், அவர்களது துயரத்தைப் பார்த்தார். அவர்களது கண்ணீரைக் கண்ணுற்றார். எனவே, மக்களது விடுதலைக்காக மானிட அவதாரம் எடுத்தார். இதுதான் கிறிஸ்மஸ் தரும் செய்தி. ஆகையினால் அதே அனுபவத்தைச் சுமந்துகிடக்கும் எம்மவர்க்கு இறைவனது தலையீடு நிச்சயம் கிடைக்கும் என்று நம்புவோமாக. இறைவன் மந்திரத்தினாலோ அல்லது தன்னிச்சையினாலே மக்களது விடுதலை வாழ்வை வழங்குவதில்லை. மாறாக, துயருறுவோரோடு தோளோடுதோள் நிற்கக் கூடியவர்கள், தம்மையே தாழ்த்தி ஏழை எளியரோடு அடையாளங் காணப்படக்கூடியவர் போன்றோர் மூலமாகவே இப்பாரிய பணியைச் செய்கின்றார். அப்பணியில் நாமும் பங்குகொள்வதே கிறிஸ்து பிறப்பைத் தகுந்த விதத்தில் உள்வாங்கக்கூடிய மற்றும் பறைசாற்றக் கூடியதான முறையாகும்.

## யேசுவே நல்வழி தாரும்

மெழுகு போலுருகிய மீட்பராம் யேசு  
மைந்தனாய் மாநில மேய்ப்பனாய் பிறந்தார்  
பொழுதினை பொன்னாகப் போற்றிய பாலகர்  
பாவங்கள் போக்கிடும் புதுமைகள் புரிந்தார்  
தொழுதுநாம் வாழ்ந்திட தெய்வமாய் வந்தெம்  
தேவனை தினமும் தேடிடும் உள்ளங்கள்  
அழுதுமே பெற்றிடா இழுபடும் பாதையில்  
எழுந்துநாம் சென்றிட ஆசீரை தாரும்.



அல்வையூர் கே.ஆர்.திருத்துவராஜா

# சர்வதேச சமூகம் தீர்வுத்திட்டத்தினை ஆணித்தரமாக முன்வைக்க வேண்டும்

## இலங்கை திருச்சபை குருமுதல்வர் நேசகுமார்



எமது தேசத்தின் சமாதானத்துக்கு குரல் கொடுக்கும் சர்வதேச சமூகம் தீர்வுத்திட்டத்தினை ஆணித்தரமாக முன்வைத்து செயற்படவேண்டும் என்று இலங்கை திருச்சபையின் யாழ். குருமுதல்வர் வண. செ.பி.நேசகுமார் தமது கிறிஸ்மஸ் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் கூறுகையில்:-

எமது தேசம் இன்று அழிவுகளுக்குள்ளும் யுத்தங்களுக்கும் மனித அவலங்களுக்குள்ளும் சென்றுகொண்டிருக்கின்றது. மக்கள் இதுவரை கேள்விப்பட்டிராத வியாதிகளும், துன்பங்களும் மக்களை மேலும் துன்பங்களுக்குள் இட்டுச்செல்கிறது. மக்கள் சொல்லொணாத் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கிறார். விசேடமாக சிறார்கள் தாங்கள் அனுபவிக்கவேண்டிய சந்தோஷங்களை, மகிழ்ச்சியை பெற்றுக் கொள்ளமுடியாதவாறு பல்வேறு தடைகள் போடப்பட்டுள்ளன. மக்களின் பாடுகளில் பங்கேற்கவும் மனித இல்லங்களில் இடமற்ற நிலையில் மாட்டுக்குடிலைத் தேர்ந்தெடுத்து மனித குலத்திற்கு வாழ்வைக் கொடுக்க இறைமகனார் வந்துதித்தார்.

எமது தேசத்தின் சமாதானத்துக்காகக் குரல் கொடுக்கும் சர்வதேச சமூகம் தங்களின் தீர்வுத் திட்டங்களை ஆணித்தரமாக முன்வைத்துச் செயற்படுமாறு கிறிஸ்து பாலகனின் பெயரால் காலாகாலமாகத் துன்பப்படும் மக்களாகக் கேட்கின்றோம் - என்று அதில் கூறியுள்ளார்.

# சுபீட்சமும் அமைதியும் கிடைக்கும் நாளாக இந்நாள் உருவாகட்டும்

## யாழ். இராணுவத் தளபதி நத்தார் செய்தி

இப்புனித நாள் நம் அனைவருக்கும் சுபீட்சமும் அமையும் கிடைக்கும் நாளாக மலரட்டும் என்று யாழ். இராணுவத் தளபதி தமது நத்தார் வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார். அவர் மேலும் குறிப்பிடுகையில்:-

இவ்வுலகில் உதித்த அனைத்து மதத் தலைவர்களும் தர்மத்தையே போதித்தார்கள், அதேபோல் யேசு கிறிஸ்துவும் தர்மம், அன்பு, கருணையுடனும் செயற்பட்டு ஏனையவர்களையும் இந்த வழியில் பயணிக்கும்படி போதனை செய்தார். மற்றவர்கள் மீது கருணை காட்டுங்கள், அன்பு காட்டுங்கள், தங்களைப் போல் மற்றவர்களையும் மதித்து அன்பாகப் பழகுங்கள் என்றெல்லாம் இயேசு கிறிஸ்து போதனை செய்துள்ளார்.



அவர் காட்டிய வழியில் நாம் பயணம் செய்தால், இன்று உலகில் ஆணவம் தலைதூக்கி மோதல், யுத்தம், பழிவாங்கல் இடம்பெறாது. குறிப்பாக, உலக யுத்தம் பழிவாங்குதல், இரத்தம் சிந்தும்போராட்டம், புரட்சிகள் இடம்பெற்ற காலப்பகுதியில்தான் இயேசு கிறிஸ்து இவ்வுலகில் உதித்தார். ஆனால், அன்று முதல் சமாதானம், அமைதி, இல்லாத ஒரு சுற்றாடல் மனித வாழ்க்கைக்கு உகந்துள்ளது என அறிந்து இயேசுபிரான் அப்போதே சமாதானத்தைப் பற்றிப் போதிக்கத் தொடங்கினார். இதனால்தான் இயேசு பிரானை சமாதானத்தின் குமரன் எனக் கூறுகின்றோம். இனம், மதம், மொழி என வேறுபாடின்றி சகல மக்கள் மத்தியிலும் ஒரே மாதிரியான தர்ம போதனை செய்தார். இந்த புனித நாள் நம் அனைவருக்கும் சுபீட்சமும் அமைதியும் கிடைக்கும் நாளாக உருவாகட்டும் - என்று தெரிவித்துள்ளார்.


# மகிழ்ச்சி நிறைந்த வாழ்வு வேண்டும்

## அமைச்சர் தேவானந்தா

இன்றைய நிலைமாறி மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்கு மக்கள் திரும்பும் நாளே அனைவருக்கும் மகிழ்ச்சி தரும் நாள்.

ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகமும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா விடுத்துள்ள கிறிஸ்மஸ் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

வன்முறையை வரிந்துகட்டிக்கொண்டு புலிகள் நடத்தும் தாக்குதல்களினதும் வன்முறைகளினதும் விளைவாக, மக்கள் அன்றாடம் படுகொலைகளுக்கு முகங்கொடுத்தபடியும், இடம்பெயர்ந்தும் வாழ்ந்து கொண்டிருக்கின்றனர். இந்த நிலையில் அடைக்கலமான ஓர் இடம், அடுத்த வேளை உணவு என்று அடுத்த விநாடியை எதிர்கொள்வதற்குப் போராடிக் கொண்டிருக்கையில் எந்தவொரு பண்டிகையையும் அதற்கே உரிய மகிழ்ச்சியோடும் ஆரவாரங்களுடனும் கொண்டாட முடியாமல் மக்கள் இருக்கின்ற நிலையே இன்று நிலவுகின்றது. இந்த நிலை மாற்றம் பெற்று மக்கள் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வுக்குத் திரும்பும் நாளே அனைவருக்கும் மகிழ்ச்சியைத் தரும் நாளாகும் - என்று அமைச்சர் தனது செய்தியில் மேலும் தெரிவித்துள்ளார்.



# சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் இருவர் 4ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணை

## பயங்கரவாதத் தடைச்சட்டத்தின்கீழ் நடவடிக்கை

கொழும்பு,டிசெ.25

புதிதாக அமுலுக்கு வந்துள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் அரசாங்க சார்புப் பத்திரிகை நிறுவனம் ஒன்றின் சிரேஷ்ட பத்திரிகையாளர்கள் இருவர் இரகசியப் பொலீஸாரால் 4ஆம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

கடந்தவாரம் பாதுகாப்பு தொடர்பான ஒரு விடயம் தொடர்பாக சண்டே ஒப்சேவரின் இணை ஆசிரியர் லயனல் யோதசிங்க மற்றும் செய்தி ஆசிரியர் ரங்கா ஜயசூரிய ஆகிய இருவரும் நாலாம் மாடிக்கு அழைக்கப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டனர் என்று தெரிய வருகிறது.

இதேபோல் சிலுமின பத்திரிகையாளர் பிரசன்ன பொன்சேகாவும் அதேவிடயமாக விசாரணைக்கு அழைக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் விதிகள் ஊடாக சுதந்திரத்தின் கொள்கைகளை மீறுவதாக வுள்ளன என்றும் இது ஊடக சுதந்திரத்தில் அப்பட்டமாகத் தலையிடும் நோக்கத்தைக் கொண்டதாகவும் உள்ளதெனத் தெரிவித்து இதனை மறுபரிசீலனை செய்யும்படி அரசாங்கத்தை சுதந்திர ஊடக நிறுவனம் கேட்டுக்கொண்டுள்ளது.

கருத்துகளையும் அபிப்பிராயங்களையும் சேகரித்து ஊடகங்களில் வெளியிடும் உரிமை பத்திரிகையாளர்களுக்கு உண்டு. இந்த உரிமைகளை இப்பொழுது அமுலுக்கு வந்துள்ள பயங்கரவாத தடைச்சட்டத்தினால் இடைநிறுத்தவோ குறைத்துவிடவோ முடியாது. எனவே, இச்சட்ட விதிகளை மீள்பரிசீலனைக்குட்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றோம் என்றவாறு சுதந்திர ஊடக அமைப்புத்தெரிவித்துள்ளது. (ப)

# தொழில்நுட்ப பரீட்சைக்குத் தோற்றும் மாணவருக்கு சேவா லங்கா மதிய உணவு வழங்க இணக்கம்

யாழ்ப்பாணம்,டிசெ.25

யாழ்.தொழில்நுட்பக் கல்லூரியில் நாளை ஆரம்பமாகவிருக்கும் இறுதிப் பரீட்சைக்குத் தோற்றவிருக்கும் மாணவர்களுக்கு மதிய உணவை வழங்க சேவா லங்கா நிறுவனம் இணங்கியுள்ளது.

கல்லூரியின் அதிபர் என்.யோகராஜன் சேவா லங்கா நிறுவனத்தின் இலங்கைக்கான தலைவர் காஸ்ஷா குமார நவரத்தினவுடன் நடத்திய கலந்துரையாடலின்பேரில் இந்த இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ளது.



தூர இடங்களில் இருந்து வந்து பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மதிய உணவு இன்றிக் கஷ்டப்படுவதால் அவர்களுக்கு உதவும்படி அதிபர் கோரிக்கை விடுத்தார்.

இக்கோரிக்கையை ஏற்று - நாளைமுதல் பரீட்சை முடியும் நாள்வரை தோற்றும் மாணவர்களுக்கு மதிய உணவை வழங்க அவர் இணங்கியுள்ளார்.

(1-88-202)

# மந்திகை ஆஸ்பத்திரியில் மீண்டும் பிரெஞ்சு வைத்தியர்

அசாதாரண சூழ்நிலை காரணமாக வெளியேறிய பிரான்ஸ் நாட்டு வைத்தியர் குழுவினர் மீண்டும் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் தமது பணிகளை ஆரம்பித்துள்ளனர்.

இக்குழு கடந்த வெள்ளிக்கிழமை வைத்தியசாலையில் மீண்டும் தமது பொறுப்புகளை ஏற்றுக்கொண்டது.

இக்குழுவில் சத்திரசிகிச்சை நிபுணர், மயக்க மருந்து சிகிச்சை நிபுணர், இணைப்பாளர் ஆகியோரும் அடங்குகின்றனர்.

மீண்டும் தமது பொறுப்புகளை இக்குழு ஏற்றுக்கொண்டதையிட்டு ஆதார வைத்தியசாலையில் சத்திரசிகிச்சைகள் மேற்கொள்ளப்படுகின்றன என வைத்தியசாலை நிர்வாக அதிகாரி தெரிவித்தார்.

இதேவேளை -

வைத்தியநிபுணர்களின் சேவைக்கு அவசியமான எக்ஸ்றே கதிர் படப்பிடிப்பு நிபுணர் இல்லாமையினால் சிரமங்கள் ஏற்படுகின்றன எனவும் அவர் தெரிவித்தார். (1-202-155-173)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாராட்டி வாழ்த்துகின்றோம்

சு.வித்தியாசாகர்



185 புள்ளி
அகில இலங்கை முதலிடம்

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலையில் தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த தேசிய மட்ட முதன்மை மாணவனையும் மாவட்ட நிலையில் 11 ஆவது இடத்தைப் பெற்ற

**கௌ.லோகீஷன் - 168 புள்ளி**
**செ.லவினன் - 168 புள்ளி**
**இ.சிவேஸ்வரன் - 168 புள்ளி**

இவர்களையும் பாராட்டி வாழ்த்துவதோடு, பாடசாலையில் சித்தியடைந்த 102 மாணவர்களையும் அத்துடன் தோற்றிய அனைத்து மாணவர்களையும் அடிப்படைத் தகைமைகளுக்கு மேல் மேம்படுத்தி புதிய உயரிய பெறுபேற்றை நல்க உந்துசக்தியாக விளங்கிய பாடசாலையின் அதிபர், உப அதிபர், ஆசிரியர்கள் அனைவருக்கும் வாழ்வு சிறக்க வளம் கொழிக்க மனம் நிறைந்து பாராட்டி வாழ்த்துகின்றோம்.

யாழ்.இந்து ஆரம்ப பாடசாலை.
பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,
பழைய மாணவர் சங்கம்.
(சி/51641)

## வீடு வாடகைக்கு

கொழும்பு கல்கிசையில், காலி வீதியிலிருந்து நான்காவது காணியில் அமைந்துள்ள புதிதாகக் கட்டிய 2 அறைகள், சமையலறை, மலசலகூட வசதியுடன் கூடிய வீடு வாடகைக்குண்டு.

**தொடர்பு: 222 5049**

## நாவல் எழுதும் திறன் உடையவர் தேவை

தனியார் நிறுவனமொன்றுக்கு விஞ்ஞான புனைகதைப் புத்தகம் ஒன்றை வெளியிட நாவலாசிரியர் தேவை. வேறு ஒருவரின் கருப்பொருளை மையமாக வைத்து சிறந்த முறையில் இலக்கிய நயத்துடன் எழுதும் ஆற்றல் உடையவர்கள் விண்ணப்பிக்கவும்.

மேலும் உங்களின் கதைகள்/கதைப் புத்தகங்கள் வெளிவந்திருந்தால் அது பற்றிக் குறிப்பிடவும்.

**விளம்பர இல. 2941**
**மே/பா உதயன்.**




சிவன் கோயிலடி, ஆவரங்காலைச் சேர்ந்தவர்களும் தற்பொழுது மலேசியாவை வசிப்பிடமாகக் கொண்டவர்களுமான **கணபதீஸ்வர சர்மா - விஜயலக்ஷ்மி** தம்பதிகளின் சீமந்த புத்திரர்களான ஜகராஜ், ஜீவராஜ் ஆகிய இரட்டைச் சகோதரர்கள் தமது மூன்றாவது பிறந்தநாளை ஸ்ரீவல்லிபுர மாயவனின் திருவருளுடனும் நகுலேஸ்வரப் பெருமான் ஆசியுடனும் மாவைக்கந்தன் துணையுடனும் இன்று [25.12.2006] திங்கட்கிழமை தமது இல்லத்தில் சிறப்புறக் கொண்டாடுகிறார்கள். இவர்களை அன்புள்ள அப்பா, அம்மா, பூட்டன்மார், பூட்டிமார், தாத்தாமார், பாட்டிமார், சித்தப்பாமார், சித்திமார், மாமன்மார், அத்தைமார் மற்றும் உற்றார், சுற்றத்தார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் சீரும் சிறப்பாகவும் வாழ வாழ்த்துகிறார்கள்.

சிவன் கோயிலடி,
ஆவரங்கால்.
63532
தகவல்:
சக சுதர்சனக்குரு (தாத்தா).

# பாராட்டி வாழ்த்துகின்றோம்



2006இல் நடைபெற்ற புலமைப் பரிசில்
பரீட்சையில் 162 புள்ளிகளைப் பெற்ற
எமது அன்புச் செல்வன்

## சிவராசா விதுஷன்

(பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி மாணவன் - கொழும்பு)
அவர்களை பல்கலையும் கற்று பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்:
அப்பம்மா மற்றும்
பெரியப்பா தங்கராசா குடும்பம்,
சித்தப்பாமார் - அம்பிகைராசா குடும்பம்,
பபிச்சந்திரன் குடும்பம்,
ஜெயராசா குடும்பம்,
மாமாமார் - பாஸ்கரசிங்கம் குடும்பம்,
கணேசவேல் குடும்பம்,
இராஜன் குடும்பம்.

அன்னை இல்லம்,
உரும்பிராய் வடக்கு.
(63550)

# மனமுவந்து பாராட்டுகின்றோம்



ஆதிகோயிலடி, வல்வெட்டித்துறையைச்
சேர்ந்த

## நடராசா சிவரத்தினம் (ஜெயம்)

ஆகிய நீங்கள் இலங்கைவங்கியின் மேற்றரக்கிளையின் முகாமையாளராகக் கடமை புரிந்துவந்தீர்கள். அண்மையில் தாங்கள் (Operation Manager) வடமாகாண இலங்கை வங்கியின் செயற்பாட்டு முகாமையாளராகப் பதவி உயர்வடைந்துள்ளதையிட்டு மிகவும் மனமகிழ்ச்சியடைகின்றோம்.

மேலும் மேலும் தாங்கள் பதவி உயர்வு பெற வேண்டும் என்று எல்லாம் வல்ல எமது கிராமத்து காவல் தெய்வமாகிய அருள்மிகு ஆதிவைரவர் பெருமானை வேண்டி எம் ஆதிகோயில் மக்கள் சார்பாகப் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

ஆதிகோயில் மக்கள்,
வல்வெட்டித்துறை.
(63616)

# யாழ்/மத்திய கல்லூரி

## சிரேஷ்ட விஞ்ஞான ஆசிரியர் திரு.சி.பாலசுப்பிரமணியம் அவர்களின்

# மணிவிழாச் சிறப்பிதழ்

### கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியில் விஞ்ஞான பாடத்தினைத் தனக்கேயுரித்தான பாணியில் கற்பித்து பல மாணவர்களின் உள்ளங்களைக் கவர்ந்தவர். கல்லூரியால் விலகிய மாணவர்களுடன் நெருங்கிப் பழகும் சுபாவம் கொண்டவர். இதனால் பழைய மாணவர்கள் பலர் இன்றும் கல்லூரியை நேசிப்பது போல் பாலசுப்பிரமணியம் ஆசிரியரையும் நேசிப்பதை அவதானித்துள்ளேன். கல்லூரியின் சேவைக்காலத்தில் பத்து வருடங்களுக்கு மேலாகப் பகுதித் தலைவராகக் கடமையாற்றி கல்லூரி நிர்வாகம் சிறப்பாகச் செயற்பட உழைத்தவர். இவரது ஓய்வுக்காலம் குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக அமைய எல்லாம்வல்ல இறைவன் துணைபுரிவாராக.

செ.பத்மநாதன் அதிபர்.

### "பாலா சேர்" ஒரு விஞ்ஞான பொக்கிஷம்

மத்தியில் நீண்டகாலம் கல்விப் பணியாற்றிய ஆசான்களில் திரு.பாலசுப்பிரமணியம் ஆசிரியரும் ஒருவர். இவர் ஆங்கில மொழிமூலம் பயின்றதால் விஞ்ஞானபாடத்தை இரு மொழிகளிலும் எளிதாகப் போதிக்கும் திறன் கொண்டவர். இவர் ஒரு விஞ்ஞான பொக்கிஷம். எமது பாடசாலையில் மட்டுமல்ல, இலங்கையின் பல பாகங்களிலும் ஆசிரிய சேவையாற்றியவர். யாழ் மாவட்டத்தில் பல ஆயிரக்கணக்கான மாணவர்களின் விஞ்ஞான அறிவை உயர்த்தியவர்களில் முக்கியமானவர் என்ற பெருமைக்குரிய இவர் யாழ் மாவட்டத்திற்கு வெளியிலும் ஆசிரிய வளம் குறைந்த கஷ்டப் பிரதேசங்களில் உள்ள மாணவர்களுக்கான இலவச கருத்தரங்குகளில் மனமுவந்து இணைந்து சேவை செய்தவர். அனைத்து மாணவர் உள்ளங்களிலும் "பாலா சேர்" என இறுக்கமாக இணைந்த இவர் யாழ். மத்திய கல்லூரியின் மூத்த ஆசிரியராக இருந்து சேவைசெய்தது மட்டுமன்றி, பகுதித் தலைவராகவும் தனது நிர்வாகத் திறனை கல்லூரிக்கு வழங்கிப் பெருமை சேர்த்தவர்.

சக ஆசிரியர் மத்தியிலும் "பாலா சேர்" என ஆழப்பதிந்த ஒரு சிறந்த ஆசான் இன்று அரச சேவையிலிருந்து ஓய்வுபெற்றாலும் யாழ் மாவட்ட மாணவர்கள் இவரின் சேவையைத் தொடர்ந்தும் பெற மேலும் பல்லாண்டு காலம் இவர் எல்லாப் பேறினையும் பெற்று தன் குடும்பத்தினருடன் இன்பமே வாழ இறைவனை வேண்டி மத்திய ஆசிரிய வட்டம் சார்பாக வாழ்த்துகின்றேன்.

த.தவராசா
தலைவர், ஆசிரியர் வட்டம்.



**திரு.சி.பாலசுப்பிரமணியம்**
விஞ்ஞான ஆசிரியர் / பகுதித்தலைவர்

பிறந்தது: 25.12.1946
உயர்கல்வி கற்றது: ஸ்கந்தவரோதயக் கல்லூரி, சுன்னாகம்.

**ஆசிரிய சேவை விவரம்:**
முதல் நியமனம்: 02.10.1970

02.10.1970 - யா/ சுன்னாகம் மயிலணி சைவ. வித்தி.
15.02.1971 - யா/ பலாலி ஆசிரியர் கலாசாலை (பயிலுநர்)
01.01.1973 - மட்/ மண்டூர் ம.வித்தி.
15.01.1973 - மட்/அக்கரைப்பற்று ம.வித்தி.
01.05.1973 - அநு/விவேகானந்தா த.ம.வித்தி.
11.03.1977 - அநு/கம்பிரிகஸ் வெவ மு.ம.வித்தி.
10.02.1978 - யா/ யாழ். மத்திய கல்லூரி
15.09.1987 - யா/அனலைதீவு சதாசிவ ம.வித்தி.
10.10.1988 - யா/விக்கினேஸ்வர வித்தி.
01.08.1989 - 24.12.2006 - யா/ யாழ். மத்திய கல்லூரி

(63530)

மலர் வெளியீடு: ஆசிரிய வட்டம்,

### இடைநிலை விஞ்ஞான கழகத்தின் இதயத்திலிருந்து...

விஞ்ஞான முறைமைகளின்
நுட்பத்திறன் அறிவும்
பண்புசார் நல்லொழுக்க நடை
முறையும் கொண்டவராய்
நிர்வாக ரீதியில் சிறந்த
பகுதித் தலைவராகவும் தடம்
பதித்த திரு பாலா சேர்
இடைநிலை வகுப்புகளில்
விஞ்ஞானக் கல்வியைக் கற்பித்தலில்
மத்திய கல்லூரியின் விஞ்ஞான
ஆசிரியர்களின் ஒருங்கிணைப்பாளர் ஆகவும்
நெறிப்படுத்துநர் ஆகவும்
சுயதிறமை இரு மொழி ஆளுமை
காரணமாக மத்தியின் பெரும்
சொத்தாக விளங்கியவர்
திரு.S.பாலசுப்பிரமணியம் அவர்களை
ஓய்வுகாலத்தில் நலமுடன் வாழ
கல்லூரியின் இடைநிலை விஞ்ஞான கழகத்தின்
சார்பில் வாழ்த்துகின்றேன்.

திரு.பு.ஸ்ரீஸ்கந்தராஜா
பொறுப்பாசிரியர், இடைநிலை விஞ்ஞானக் கழகம்.

### மாணவ இதயங்களிலிருந்து....

180 வருடங்கள் தொன்மைவாய்ந்த - அதி உன்னதமான பாரம்பரியமும் வரலாறும் கொண்ட எமது கல்லூரியிலே நீண்டகாலமாக ஆசிரியராகவும் பகுதித் தலைவராகவும் சேவையாற்றி ஓய்வுபெறும் ஆசிரியர் திரு.சி.பாலசுப்பிரமணியம் அவர்கள் கல்லூரியின் கல்விசார் வளர்ச்சிக்கு அளப்பெரும் பங்காற்றியவர். அதிலும் குறிப்பாகக் கல்லூரியின் விஞ்ஞான பாடத்துறையின் முதுகெலும்பாகத் திகழ்ந்தவர். கல்லூரியில் மட்டுமன்றி யாழ்ப்பாண மாவட்டத்திலேயே தலைசிறந்த விஞ்ஞான ஆசிரியர்களில் ஒருவராகத் திகழ்ந்த இவர், விஞ்ஞான விளக்கங்களைத் துல்லியமாக விபரிப்பதில் கைதேர்ந்தவர். அத்துடன், சாதாரண தரப் பரீட்சையில் வினவப்படவிருக்கும் வினாக்களைத் துல்லியமாக முன்கூட்டியே தீர்க்கதரிசனமாக எதிர்வுகூறுவதில் இருந்து இவருக்கு விஞ்ஞான பாடத்துறையில் இருக்கும் திறமையையும் அனுபவத்தினையும் அறியலாம். ஓய்வுபெற்றுச் செல்லும் எமது ஆசான் அவரது பிந்தியான காலத்தினைத் தமது குடும்பத்தாருடன் மகிழ்வுடன் கழிக்கவேண்டும் என எமது கல்லூரி மாணவர்கள் சார்பிலும் கல்லூரியின் மாணவ முதல்வர் சபையின் சார்பிலும் வாழ்த்துகின்றேன்.

ஜெ.ஸ்ரீ[illegible] சிரேஷ்டமாணவ முதல்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனமாசுகள் நீங்கி உய்வு பெறும் மார்கழிமாத நோன்பு காலம்



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக்கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே. வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய
வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு)
இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதே எந்தோழி பரிசேலோர் எம்பாவாய்!

மார்கழி மாதம் பிறந்து விட்டாலே சைவ ஆலயங்களிலும் மற்றும் சைவ அன்பர்கள் வாழும் தெருவெங்கிலும் திருவெம்பாவைப் பாடல்கள் ஒலிக்கும். இக் காட்சிகளையும் பாடல்களையும் கண்டாலும் கேட்டாலும் பக்தி பெருகும். பக்திக்கொரு மாதம் மார்கழி என்றால் பக்திக்கொரு மொழி தமிழாகும். மாணிக்கவாசக சுவாமிகளால் பாடப்பெற்ற திருவெம்பாவைப் பாடல்கள் இருபதாகும். திருவாசகம் என்னும் தேனில் உள்ள பல பதிகங்களில் திருவெம்பாவையும் ஒன்றாகும்.

மார்கழி மாத நோன்புகளில் பெண்கள் வைகறைத் துயில் எழுந்து எம்பெருமான் புகழ்பாடியவாறு நீராடுவது இன்றும் கிராமங்கள் தோறும் உள்ள வழக்கமாகும். கன்னியர் நீர் நிலைகளை நாடிச் செல்லும்போது தம் தோழியரையும் கூவி அழைத்துச் செல்வதாக இப் பாடல்கள் தோறும் காணக்கிடக்கின்றது. இதை பக்குவம் அடைந்த ஆன்மா, பக்குவம் அடையாத மல இருளில் அழுந்திக் கிடக்கும் ஆன்மாவை எழுப்பி இறைவனின் அருட்சுனையாம் பேரின்பத்தில் திளைப்பதற்கு அழைப்பதாக தத்துவப் பொருள் கூறுவர் பெரியோர்.

குளங்களிலும், தடாகங்களிலும் நீராடுவோர் தங்கள் கைகளை நீரின்மேல் அடித்து நீரைக் குடைந்து ஒருவித ஓசை வரக்கூடியதாக நீராடுவார்கள். இதையே மணிவாசகரும் தம் பதினோராம் பாட்டில்

'மெய்யார் தடம்பொய்கை புக்கு முகேர் என்னக்

கையாற் குடைந்து குடைந் (து) உன்

**அ.நா.குழந்தைவேலன்**

கழல்பாடி' எனவும் -

பன்னிரண்டாம் திருப் பாட்டில்

'பூத்திகளும் பொய்கை குடைந்(து) உடையான் பொற்பாதம்' என்றும் கூறுகின்றார்.

கன்னியர்கள் தங்கள் வாழ்வினிலே தங்களுக்கு வாய்க்கும் கணவர் எப்படிப் பட்டவராக இருக்க வேண்டும் என் பதையும் எம்பெருமானிடத்தில் வேண்டிநிற்கின்றனர்.

'உன்னைப் பிரானாகப் பெற்ற உன் சீரடியோம்

உன்னடியார் தாள் பணிவோம் ஆங்(கு) அவர்க்கே பாங்காவோம்

அன்னவரே எங்கணவர் ஆவார் அவர் உகந்து

சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணி செய்வோம்

இன்ன வகையே எமக்கெங்கோன் நல குதியேல்

என்ன குறையும் இலோம்......'

என ஒன்பதாம் பாடலிலும்

'எங்கள் பெருமான் உனக் கொன்றுரைப்போம் கேள்

எங் கொங்கை நின் அன்பர் அல்லார் தோள் சேரற்க'

என பத்தொன்பதாம் பாடலிலும் வேண்டி நிற்கின்றனர்.

இப்படியாக பாடல்கள் தோறும் சொல் நயமும், பொருள் நயமும், பக்தி ரசமும், மொழி இனிமையும் ஒருங்கே சேர்ந்திருப்பதால் அன்றோ தேனினும் இனியது திருவாசகம் என்பவர். திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார் என்பது ஆன்றோர் வாக்கு. திருவாதிரை நன்நாள்களில் மணிவாசகப் பெருமான் அருளிய திருவெம்பாவைப் பாடல்களை நாம் ஓதியும், பிறர் ஓத நாம் கேட்டும் வருவதனால் இறையருள் நமக்குக் கிட்டும். ☼

## சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,டிசெ.25

மட்டுவில் வடக்கு, பன்றித் தலைச்சி கண்ணகை அம்மன் கோவில் பெருந்திருவிழா நாளைமறுதினம் புதன்கிழமை நண்பகல் 12 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

எதிர்வரும் 2ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு தேர் உற்சவமும் மறுநாள் முற்பகல் 10 மணிக்கு தீர்த்த உற்சவமும் நடைபெறும்.

(202)

☼ ☼ ☼

யாழ்ப்பாணம்,டிசெ.25

அளவெட்டி, நாகேஸ்வரம் ஸ்ரீ நாகவரத நாராயணர் ஆலய சுவர்க்கவாயில் ஏகாதசி விழா எதிர்வரும் சனிக்கிழமை அதிகாலை 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

அன்றையதினம் காலை 8.30 மணிக்கு அபிஷேகமும், முற்பகல் 11 மணிக்கு வீதியுலாவும் இடம்பெறும்.

மறுநாள் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 2 மணிக்கு 1008 சங்காபிஷேகமும் அதிகாலை 5 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம்பெறும்.

(202)

☼ ☼ ☼

சுழிபுரம்,டிசெ.25

சுழிபுரம் ஈஸ்வர விநாயகர் ஆலயத்தில் விநாயகர் பெரும் கதைப்படிப்பு தினமும் நடைபெற்று நேற்று ஞாயிற்றுக்கிழமையும் இன்று திங்கட்கிழமையும் பெருவிழாக்கள் நடைபெறுகின்றது.

இதேபோல் மூளாய், தொல்புரம், பொன்னாலை, சித்தன்கேணி ஆகிய இடங்களில் உள்ள விநாயகர் ஆலயங்களில் படிப்பு திருவிழாக்கள் நடைபெற்று வருகின்றன.

(28)

## நிபுணர்குழுவின் அறிக்கை ஜனவரியில்

கொழும்பு,டிசெ.25

சர்வகட்சிப் பிரதிநிதிகள் மற்றும் நிபுணர்கள் குழுவினரின் யோசனைகளைக் கருத்திற்கொண்டு அதிகாரப் பரவலாக்கம் சம்பந்தப்பட்ட புதிய யோசனைகளை எதிர்வரும் ஜனவரி மாதத்தில் தயாரிக்கவுள்ளதாக சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

இப்புதிய யோசனைகள் சர்வகட்சி மாநாட்டில் முன்வைக்கப்பட்ட பின்னர் ஜனாதிபதியிடம் கையளிக்கப்படவுள்ளதாகவும் விதாரண மேலும் தெரிவித்தார்.

(1-12)


**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

யா/மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்

2006ஆம் ஆண்டு 5ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த

செல்வன் தனுராஜ் - 158 புள்ளிகள்
செல்வி க.மயூரா - 147 புள்ளிகள்
செல்வி சி.ஜெனார்த்தனி - 146 புள்ளிகள்
செல்வி பா.மந்தாகினி - 146 புள்ளிகள்
செல்வி து.அபிராமி - 134 புள்ளிகள்

ஆகியோரையும் 100 புள்ளிக்கு மேல் பெற்ற 11 மாணவ, மாணவிகளையும் இம்மாணவர்களை ஊக்குவித்த ஆசிரியர்களையும் பாராட்டி மேன்மேலும் வாழ்வில் உயர்ச்சிபெற வாழ்த்துகின்றோம்.

(63718)

அதிபர், ஆசிரியர்கள்,
யா/ மல்லாகம் கனிஷ்ட வித்தியாலயம்.

**யாழ். மத்திய கல்லூரி**

**பழைய மாணவர் சங்கம்**

**1906 2006**

**நூற்றாண்டு**

25th DECEMBER

(C/51638)

அனுசரணை

யாழ். மத்திய கல்லூரி - பழைய மாணவர் சங்கம் - கொழும்பு

**வாழ்த்தி வரவேற்கின்றோம்**

**பேராயர் அதிவண. கலாநிதி D.S.தியாகராஜா**

தென் இந்தியத் திருச்சபை - யாழ். ஆதீனம்



தென் இந்தியத் திருச்சபை யாழ். ஆதீனத்தில் 4ஆவது பேராயராகப் பொறுப்பேற்று முதன்முதலாக எங்கள் பகுதிக்கு 25.12.2006 **"திடப்படுத்தல் வழிபாடு"** நடத்த வருகைதரும் பேராயரை மிகுந்த மனமகிழ்ச்சியோடு வரவேற்கின்றோம்.

**வரவேற்பவர்கள்:**

1. மூளாய் திருச்சபை நிர்வாக சபையும் சபை மக்களும்
2. இன்பர்சோலை நிர்வாக சபையும் சபை மக்களும்
3. சமாதானக்கோட்டை நிர்வாக சபையும் சபை மக்களும்
4. ஆனந்த நிலைய திருச்சபை நிர்வாகத்தினரும் சபை மக்களும்
5. அராலி மேற்கு முத்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்
6. அராலி மத்தி செந்தமிழ் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்
7. வட்டு. தெற்கு அம்பாள் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்
8. வேரம் ஐக்கிய சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்
9. சுழிபுரம் அருட்தீபம் சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்
10. சுழிபுரம் கெங்காதேவி கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தினர்
11. காட்டுப்புலம் கிராமிய அபிவிருத்திச் சங்கத்தினர்
12. சுழிபுரம் வளர்மதி பெண்கள் சங்கத்தினர்
13. சுழிபுரம் பூமகள் பெண்கள் சங்கத்தினர்
14. சுழிபுரம் புதுமலர் பெண்கள் சங்கத்தினர்
15. குடாக்கனை மல்லிகை பெண்கள் சங்கத்தினர்
16. பாண்டவெட்டை கலைமகள் பெண்கள் சங்கத்தினர்
17. தொல்புரம் கலைவாணி சனசமூக நிலைய நிர்வாகத்தினரும் சமூக மக்களும்

(65000)

IBS சுண்டுக்குளி.
தரம் 3 முதல் O/L வரை
தரம் 5 புலமைப் பரிசில்
சுபேசன் ஆசிரியர்
English Medium
ICT Classes
A/L 2008 Com.
DEC. 31உடன் அனுமதி நிறுத்தப்படும்.

ENGLISH MEDIUM CLASSES
SCIENCE & MATHE MATICS
YEAR:- 6,7,8,9,10and London (O/L)
தனிப்பட்ட வகுப்பு ஒழுங்குசெய்யப்படும்.
விவரங்களுக்கு:-
பரமராசா குகராஜன்
சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

**வடபகுதி உப்பள ஊழியர்களுக்கான சம்பளம் தொடர்பாக சமூக சேவைகள் அமைச்சரைச் சந்தித்தல்.**

வட பகுதி உப்பள ஊழியர்களிற்கான நிலுவைச் சம்பளம் தொடர்பாக மாண்புமிகு சமூக சேவைகள் அமைச்சரைச் சந்திப்பதற்காக எதிர்வரும் 26ஆம் திகதி சிறிதர் தியேட்டருக்கு செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு அவரது காரியாலயத்திற்கு சமுகம் அளிக்குமாறு அனைவரையும் கேட்டுக்கொள்கின்றோம்.

இலங்கை உப்புக் கொம்பனி ஊழியர்களின் நலன்விருத்திச் சங்கம். வடபிராந்தியம். ஆனையிறவு.

(65003)

க.வேலுப்பிள்ளை, தலைவர்.

**கண்ணீர் அஞ்சலி**

எமது கல்லூரியின் முன்னாள் ஆசிரியர்

**சின்னப்பு கனகசபாபதி**

அவர்கள் காலமானதையிட்டு
எமது கண்ணீரைக்
காணிக்கையாக்குவதுடன்
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
ஸ்ரீ சோமாஸ்கந்தப் பெருமானைப்
பிரார்த்திக்கின்றோம்.

நலன்புரிக் கழகம்.
ஸ்ரீ சோமாஸ்கந்தக் கல்லூரி.
புத்தூர்.

(63537)

**அன்னை நாகா பூட் சிற்றி**

175, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 222 5515 / 021 222 5223

எமது வாடிக்கையாளர்கள், அன்பர்கள், நண்பர்கள் அனைவருக்கும்
எமது இனிய நத்தார் - புதுவருட வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

**விரையுங்கள்... விரையுங்கள்...**

**அமோக அதிரடி விலைத்தள்ளுபடி**

**STOCK CLEARANCE SALES**

**டிசெம்பர் 18ஆம் திகதி முதல்**

★ விளையாட்டுப் பொருள்கள்
★ புடைவைகள்
★ தைத்த ஆடைகள்
★ சமையற் பாத்திரங்கள்
★ வீட்டுப்பாவனைப் பொருள்கள்
★ கிளாஸ்செற் வகைகள்
★ அன்பளிப்புப் பொருள்கள்
★ அழகுசாதனப் பொருள்கள்

இன்னும் பல விசேட கழிவுவிலையில் விறுவிறுப்பாக விற்பனையாகிக் கொண்டிருக்கின்றன.

இச்சலுகை கையிருப்புத் தீரும்வரை மட்டுமே.

"அன்னை நாகா பூட் சிற்றி"
175, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 021 222 5515 / 021 222 5223

இலங்கை காப்புறுதித் துறையில் தலைமைத்துவ வெற்றியாளராகத் திகழும்

**செலிங்கோ இன்சுரன்ஸ் கம்பனி லிமிட்டட்**

சுன்னாகம் கிளையின் வாடிக்கையாளரின்
சேவையை விஸ்தரிக்கவுள்ளது

**பிரகாசமான எதிர்காலத்தை பெற விரும்பும் துடிப்புள்ள இளைஞர் யுவதிகளை எதிர்பார்க்கிறது.**

**விற்பனை ஆலோசகருக்கான நேர்முகத் தேர்வு**

- கவர்ச்சிகரமான ஊதியம்
- திறமைக்கேற்ப பதவி உயர்வு
- இலவச மருத்துவக் காப்புறுதி
- மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவு
- குறைந்த வட்டியிலான வாகன, வீட்டுக்கடன்

(63727)

**தகைமைகள்**

18 வயதிற்கு மேற்பட்டவர்
உயர்தர பரீட்சையில் சித்தி

மேற்குறிப்பிட்ட தகைமையை உடையோர் கல்வித் தகைமைகளை உறுதிப்படுத்தும் ஆவணங்களுடன் 26.12.2006 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணி - பிற்பகல் ஒரு மணிவரை நேரில்சமூகம் தரவும்.

செலிங்கோ இன்சுரன்ஸ்
கம்பனி லிமிட்டெட் (ஆயுள்)
146/148, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.
தொ.பே.: 021 222 8074


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## துயர் பகிர்கின்றோம்

### திருமதி இராஜேஸ்வரி இரவீந்திரன்

(ஆசிரியை - மண்டை தீவு - நோர்வே)

எமது சங்கத்தின் பொது முகாமையாளர் சபாலிங்கம் விநாயகமூர்த்தி அவர்களின் அன்புச் சகோதரியும் எமது சங்கத்தின் போக்குவரத்து உத்தியோகத்தர் க.பிரதீபன் அவர்களின் அத்தையுமான திருமதி இராஜேஸ்வரி இரவீந்திரன் அவர்கள் நோர்வேயில்21.12.2006 இல் காலமான செய்திகேட்டு அதிர்ச்சி அடைந்துள்ளோம். அவரது பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

*பணிப்பாளர்கள் , பணியாளர்கள்,*
*வேலணை ப.நோ.கூ. சங்கம், வேலணை.*

(63735)

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



எமது குடும்ப நண்பர் வைத்திய கலாநிதி க.ஸ்ரீதரன் அவர்களின் அன்புத் தந்தை

வைத்திய கலாநிதி

### சின்னத்தம்பி கணேஸ்

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம். (63509)

ந.சிவராஜா
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

மலர்வு 16 . 07 . 1933



உதிர்வு 24 . 11 . 2006

திருமதி

### ஞானேஸ்வரி தர்மலிங்கம்

24.11.2006 வெள்ளிக்கிழமை அன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவி திருமதி ஞானேஸ்வரி தர்மலிங்கம் அவர்களது வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் இன்று (25.12.2006) திங்கட்கிழமை மு.ப 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளன. அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் தொடர்ந்து நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அழைக்கின்றோம்.

முத்தட்டிமடம் லேன்,
கோண்டாவில் மேற்கு,
கோண்டாவில். (63558)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டின் ஆறா நினைவலைகள்



அமரர்

### சதாசிவம் குணச்செல்வம்

( ஓய்வுபெற்ற கிராம அலுவலர் )

மண்ணின் நுனமாய்
05.02.1952

விண்ணின் செல்வமாய்
04.01.2006

குணத்தின் குன்றென உயர்ந்த செல்வமே
கண்ணின் மணியாய் அரவணைத்து வழிகாட்டி
அன்பொடு வாழ்ந்த இனிய தலைவனின்
ஆத்ம சாந்தி வேண்டி ஏத்துகிறோம் பரனடியே
சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

*பருத்தித்துறை வீதி,*
*கொடிகாமம்.* (63642)

குடும்பத்தினர்.

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 31 . 03 . 1934



விண்ணில் 04 . 01 . 2006

**அமரர் வேலுப்பிள்ளை செல்லையா ( மெம்பர்)**

( திதி : 25.12.2006 )

எங்கள் குடும்பத்தின் குல தெய்வமே
எங்கள் சூரிய விளக்கே - அப்பா
எங்களை விட்டு நீங்கள் பிரிந்து
ஆண்டொன்றல்ல பல்லாண்டு - சென்றாலும்
எங்கள் செல்ல ஐயாவை மறக்க முடியுமா?

அன்னாரின் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்

மிருசுவில் வடக்கு,
மிருசுவில். (63738)

குடும்பத்தினர்.

## நாய்க்குட்டி விற்பனைக்கு

2 1/2 மாதம் நிரம்பிய அல்சேசன் ஆண் நாய்க்குட்டியும், 1 வயது 4 மாதம் நிரம்பிய அல்சேசன் ஆண் நாயும் விற்பனைக்குண்டு.

தொடர்பு :
92,சீனிவாசகம் வீதி, கொட்டடி, யாழ்ப்பாணம்.

## சிறு விமான சேவை

**யாழ். - கொழும்பு விமான சேவைகள்**

*தனியார் நிறுவனத்தின் நான்குபேர் பயணிக்கத்தக்க சிறு விமான சேவை உத்தரவாதத்துடன் நடைபெறுகின்றது. உடனடிப் பயணம்.*

தொடர்பு:- தொ.பே.: 0112721789, 0114964994, 0785788811, 0785325501

## கண்டெடுக்கப்பட்டது

22.12.2006 அன்று திருகோணமலை காங்கேசன்துறை கப்பலில் பயணம் செய்த ஒருவரின் பார்சல் ஒன்று தெல்லிப்பழையில் கண்டெடுக்கப்பட்டது. உரியவர்கள் ஆதாரம்காட்டிப் பெற்றுக்கொள்ளவும்.

**தேவசகாயம் நேசநாயகம்**
சேச் லேன், குப்பிளான் தெற்கு,
ஏழாலை.

(63731)

## பாடசாலை சேவை

நவாலி,மானிப்பாய், சுதுமலை, தாவடி, பொற்பதி, கொக்குவில் ஊடாக யாழ். நகரப் பாடசாலைக்கு (பிறிட்டிஸ், பொஸ்கோ, கண்டுக்குழி, சென்.ஜோன்ஸ்) சேவையில் ஈடுபடும் எமக்கு மாணவர்கள் தேவைப்படுகின்றனர். (தரம்1, தரம்2) எமது சேவை இருக்கைக்கு அளவாகவே மாணவர்கள் ஏற்றிச் செல்லப்படும்.

தொடர்பு: **செ.சுஜிந்தரன் (சாரதி)**
அரசடி, நவாலி. தொ.பே.இல.: 021 4591015

(63706)

## பத்தாம் ஆண்டு நினைவஞ்சலி



அமரர்

### வி.எஸ்.குணசிங்கம்

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)

திதி : 25.12.2006

தோற்றம் : 05.02.1931
மறைவு : 16.12.1996

**பத்து ஆண்டுகள் நகர்ந்தாலும் – உங்கள் பாச நினைவுகளுடன் வாழும்...**

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

48, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

## கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை திருமதி மதிவதனி - பாஸ்கரன் அவர்களின் அன்புத் தந்தை

**ஆறுமுகம் கந்தையா**

அவர்களின் மறைவையொட்டி அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு, அன்னாரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், கல்விசாரா ஊழியர்கள், மாணவர்கள்.
யா/குளமங்கால் றோ.க.வித்தியாலயம்.

## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர்

**கனகசபை சரஸ்வதி**

தோற்றம்
14.02.1927

மறைவு
04.01.2006

திதி : பஞ்சமி 25.12.2006

என்றும் உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

17/5, சாஸ்திரியார் வீதி,
அரியாலை,
யாழ்ப்பாணம்.

குடும்பத்தினர்.

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### கந்தையா கனகலிங்கம்

உடுவில் கிழக்கு, கற்பகப் பிள்ளையார் ஆலய பரிபாலன சபையின் நீண்டகால உறுப்பினரும், மேற்படி ஆலய வளர்ச்சிக்கு தனது வாழ்க்கைக் காலத்தின் பெரும் பகுதியினை அர்ப்பணித்து ஆலய வளர்ச்சியினை ஏற்படுத்திய ஒப்பிட முடியாத ஒரு பெருந்தகையாகவும் திகழ்ந்த அமரர் கந்தையா எ கனகலிங்கம் அவர்களின் திடீர் மறைவுச் செய்தி கேட்டு மேற்படி ஆலயச் சமூகம் அதிர்ச்சியும் பெரும் துயரும் அடைந்தது.

அன்னாரது இழப்பு எமக்கு ஈடுசெய்ய முடியாதது. அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு மேற்படி ஆலய மக்கள் சார்பாக எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல கற்பக விநாயகரைப் பிரார்த்திக்கின்றோம்.

உடுவில் கிழக்கு கற்பக விநாயகர் ஆலய
பரிபாலன சபையினரும்,
அவ்வூர் கிராம மக்களும்.



## 50ஆவது பிறந்தநாள் வாழ்த்து

இன்று (25.12.2006) திங்கட்கிழமை அகவை ஐம்பதை நிறைவு செய்யும்

### திருமதி சாந்தகுமாரி சிவானந்தம்

(சாந்தி)


அவர்கள் இன்று போல் என்றும் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றோம்.

*வாழ்த்துபவர்கள்:*
கலட்டிக் கண்ணன் குடும்பத்தினர்.

(65011)

## 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 23 . 06 . 1941



உதிர்வு 21 . 12 . 2001

அமரர்

### பொன்னம்பலம் விஜயரட்ணம்

(ஓய்வுபெற்ற இ.போ.ச.சாலைப் பரிசோதகர். கோண்டாவில்)

( திதி : 25 .12 .2006 )

ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவரோ?
உங்கள் ஆத்மா சாந்தியடைய என்றும்
ஆண்டவனை வேண்டுகின்றோம்.

கலைவாணி வீதி,
கோண்டாவில் வடக்கு,
கோண்டாவில். (58182)

மனைவி,மக்கள்,
மருமகன்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

*தோற்றம்* 22 . 09 . 1931



*மறைவு* 25 . 11 . 2006

### அமரர் Dr. சின்னத்தம்பி கணேஸ்

25.11.2006 அன்று இறைவனடி சேர்ந்த எங்கள் அன்புத் தெய்வத்தின் இறுதிக்கிரியைகளில் கலந்தும் கண்ணீர் அஞ்சலிகள், அனுதாபச் செய்திகளை பத்திரிகைகளிலும் தொலைபேசி மூலமாகவும் ஆறுதல் தெரிவித்தும் மற்றும் சகல வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் நன்றிகளைத் தெரிவிப்பதோடு, இன்று (25.12.2006) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*கமலா வைத்தியசாலை,*
*11ஆம் வட்டாரம், புங்குடுதீவு.* (63708)

குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

### *திருமதி இராஜேஸ்வரி ரவீந்திரன்*

(ஆசிரியை - மண்டைதீவு)



மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட திருமதி இராஜேஸ்வரி ரவீந்திரன் 21.12.2006 வியாழக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சபாலிங்கம் - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பாலசிங்கம் - மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகளும் வண்ணார்பண்ணை சீனியர் லேனைச் சேர்ந்த ரவீந்திரனின் (நோர்வே) பாசமிகு மனைவியும் சயந்தியின் (நோர்வே) அன்புத் தாயும் விஜயரெத்தினம், விநாயகமூர்த்தி (பொது முகாமையாளர், வேலணை ப.நோ.கூ.சங்கம்), கேதீஸ்வரன், யதுகுலசிங்கம், யதுகுலமணி (நோர்வே) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சிவஞானதேவி, இரத்தினானந்ததேவி, சந்திரவதனா, நளாயினி (நோர்வே), சௌந்தரராஜன் (நோர்வே), தெய்வேந்திரன், லோகேந்திரன் (கனடா), மகாலட்சுமி, மனோராஜனி (சுவிஸ்), மனோபத்மினி (ஜேர்மனி), மனோரஞ்சினி (கனடா) ஆகியோரின் மைத்துனியும் ஸ்ரீரஞ்சினி, சுலேசனா (கனடா), சுபாஸ்கரன், சற்குணம் (சுவிஸ்), சச்சி தானந்தம் (ஜேர்மனி), தவராஜா (கனடா) ஆகியோரின் சகலி யும் கவீந்திரன், வினோஜா, ஜனாகரன், யசிந்தன், அகீபன், பிரதீபன், பிரியகீர்த்தனா, கஜலக்ஷி, தனராகவி, அஜந்தன் (நோர்வே), சர்மிகா (நோர்வே), மிதுலா, தர்மிகா ஆகியோரின் அன்பு மாமியும் வித்தியா (நோர்வே), விவேதன் (நோர்வே) ஆகியோரின் பெரியம்மாவும் பவனுஜா, ஓவியா, இலக்கியா ஆகியோரின் சிறிய தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 28.12.2006 வியாழக்கிழமை நோர்வேயில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

*32/4, பிறவுண் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (63710)

*தகவல்:*
**சபா.விநாயகமூர்த்தி**
*(சகோதரன்)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி, தொலைநகல்: 222 9933, 222 3837 - 222 9944

## உள்நோக்கங்களை உள்ளடக்கிய அரசின் தீர்க்கதரிசனமற்ற செயல்

பதினெட்டு வருடங்களாக நிர்வாக அமைப்பிலும், சட்ட ரீதியாகவும் இணைந்திருந்த வடக்கு - கிழக்கு, இரண்டு நாள்களுக்கு முன்னர் நிர்வாக அமைப்பில் பிரிக்கப்பட்டுவிட்டது. இணைப்பு சட்டரீதியற்றது என்று ஏற்கனவே உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

வடக்கு - கிழக்கு இணைப்பு சட்டவிரோதமானது என்று உயர்நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தாலும்கூட, இணைப்பை உறுதி செய்யும் வகையில் நாடாளுமன்றத்தில் சட்டமூலம் ஒன்றைக் கொண்டு வந்து நிறைவேற்றி நிரந்தரமாக்குவதற்கு வழி இருந்தது. அதற்குப் பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவும் ஒத்துழைப்பும் வழங்கத் தயாராக இருந்தது.

ஆனால், அரசாங்கம் திடுதிப்பென, எவ்வித சத்தம் சந்தடியுமின்றி, வடக்கு - கிழக்கு மாகாணத்தின் நிர்வாக அமைப்பை இரண்டாகப் பிரித்துவிட்டது. வடக்கு - கிழக்கு மாகாணங்களுக்குத் தனித்தனியான ஆளுநர்களையும் செயலாளர்களையும் நியமித்துள்ளது.

அத்தோடு நிர்வாக மையங்களை மூன்றாகப் பிரிக்கவும் அரசு முடிவு, செய்திருக்கிறது. வடக்கின் நிர்வாக அலகை வவுனியாவிலும் கிழக்கின் நிர்வாக அலகைக் கல்முனையிலும் இன்னொரு கிழக்கு அலகைத் திருகோணமலையிலும் அமைக்கும் ஏற்பாடுகளை அரசு செய்து வருகிறது.

இந்த ஒழுங்கு உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரமே நடைமுறைப்படுத்தப்பட இருப்பதாக அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

உயர்நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் செயற்பட உள்ளதாக அரசாங்கம் சாட்சி வைத்தாலும், இந்தத் தன்னிச்சையான முடிவு, வடக்கு - கிழக்கு வாழ் தமிழ் பேசும் மக்களுக்கு - தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் - மிகப் பெரும் பாதிப்புகளையும் பின்னடைவுகளையும் உண்டாக்கும் உள்நோக்கம் கொண்டது என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

உயர்நீதிமன்றத் தீர்ப்பு என்பதற்காக, அதனால் ஏற்படவுள்ள பாதிப்புகளைச் சீர்தூக்கிப் பார்க்காமல், சீர்செய்வதற்கான மாற்றுவழி இருந்தும் அதனைச் சிந்திக்காமல், ஏனைய அரசியல் கட்சிகளுடன் கலந்தாலோசிக்காமல், ஏற்படக்கூடிய பின் விளைவுகள் குறித்துச் சிறிதளவும் கருத்திற்கொள்ளாமல் செயற்பட்டிருப்பதில், அரசிடம் விசமத்தனமான உள்நோக்கங்கள் உண்டு என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தம்மைக் கடந்த வெள்ளிக்கிழமை சந்தித்தபோது, இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் தெரிவித்த கருத்து, இலங்கை அரசுக்குக் கலக்கத்தைக் கொடுத்திருக்க வேண்டும். அதாவது, இலங்கையின் வடக்கு - கிழக்கு பிரிக்கப்படக்கூடாது என்பதில் இந்தியா உறுதியாக இருப்பதாக இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் தெரிவித்திருந்தார். இந்தியாவின் இந்த நிலைப்பாடு இலங்கை அரசுக்கு வயிற்றில் புளி வார்த்தது போலாகி இருந்திருக்குமோ...! எனவே, தாமதம் எதுவும் செய்யாது, முந்திக்கொண்டு அன்றைய தினமே அரசு வடக்கு - கிழக்கைப் பிரித்துவிட்டது.

அரசு அவசர அவசரமாகவும் திடீரெனவும் காரிய மாற்றியது இந்தியாவை இவ்விடயத்தில் தலையிட வைக்காமல் தடுத்துவிடும் நோக்கமுடையதே.

இந்த நடவடிக்கை - உள்நோக்கம் - இனப்பிரச்சினை தொடர்பான இந்தியாவின் நிலைப்பாட்டுக்கு சவால் விடும் செயல் என்பது மிகத் துலாம்பரமானது.

இவ்வாறு செய்ததன்மூலம், இது விடயத்தில் இந்தியாவின் தலையீடு அல்லது அழுத்தத்திலிருந்து விடுபட்டுவிடலாம், தடுத்துக்கொள்ளலாம் என்று ஜனாதிபதியின் ஆலோசகர்கள் அவருக்கு மந்திராலோசனை கூறியிருந்தார்களோ, என்னவோ! அவ்வாறு நினைத்திருப்பின் அவர்களின் எதிர்பார்ப்புக்கு எதிர்மறையான விளைவுகளையே கொண்டுவரும் என்பதை இப்போது புரியாவிட்டாலும் பின்னர் உணர நேரிடும்.

அரசாங்கம் இவ்வாறு திடுதிப்பென 'சுடுகுது மடியைப் பிடி' என்ற தோரணையில் எடுத்திருக்கும் நடவடிக்கை தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு முற்றிலும் முரணானது என்பதனைச் சொல்லித்தான் தெரியவேண்டும் என்றல்ல. இதனால் இன விவகாரம் மேலும் சிக்கலடையுமே அன்றி சிறிதாகி விடப்போவதில்லை.

ஏற்கனவே சிக்கலுற்றுப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்கான தீர்வு முயற்சிகள், மேலும் இறுக்கமடைந்து கற்பாறையாக மாறிவிடும் என்பதிலும் சந்தேகம் கொள்வதற்கில்லை.

விடுதலைப் புலிகள் மட்டுமே என்பதற்கு அப்பால் நின்று, தமிழ் மக்களின் எதிர்பார்ப்புகள், அபிலாசைகளைப் புறந்தள்ளி வைத்துவிட்டு ஆட்சித் தலைவர்களால் தன்னிச்சையாக எடுக்கப்பட்ட முடிவுகள், அவற்றின் செயற்பாடுகள் கடந்த காலத்தில் உண்டாக்கிய விளைவுகள் எத்தகையவை என்பதனைச் சற்றும் பின்னோக்கிப் பார்க்காமல் செய்த காரியமே.

தமிழர்களின் விருப்பத்துக்கு மாறாகக் கொண்டுவரப்பட்ட தனிச்சிங்களச் சட்டமே, இன விவகாரம் இன்றைய அளவுக்கு ஊதிப் பெருத்து நிற்பதற்குக் காரணம் என்பதனை இப்போது உணராதவர்கள் சிங்களத் தரப்பில் இல்லை எனலாம்.

அதனாலேயே, ஆறாம் ஆண்டு தொடக்கம் ஒன்பதாம் ஆண்டுவரை சிங்கள மாணவர்கள் தமிழையும்-தமிழ் மாணவர்கள் சிங்களத்தையும் பயிலவேண்டும் என்று கல்வி அமைச்சு புதிய விதி செய்திருக்கிறது.

இணைந்திருந்த வடக்கு - கிழக்கைப் பிரித்து, நிர்வாக அலகுகளை இரண்டு மூன்றாக்கும் முடிவு முற்றிலும் தீர்க்கதரிசனமற்றது. புலிகள் வேறு தமிழர்கள் வேறு என்று வெளிநாடுகளில் பிரசாரம் செய்யும் மகிந்தா, இவ்வாறுதான் தமிழ் மக்களுக்கு நியாயம் செய்யப்போகிறார் என்பதற்கான ஒரு முன்னுதாரணமா இது?

வடக்கு - கிழக்கை இரண்டாகப் பிரித்துவிட்டு, திருகோணமலை மாவட்டத்தைத் தனி நிர்வாக அலகாக்கி, தமிழ் முஸ்லிம் மக்களின் இனவிகிதாசாரத்தை மாற்றி, பிரச்சினையை வேறு திசைக்குக் கொண்டுசென்று மேலும் குழப்பங்களை ஏற்படுத்தும் உள்நோக்கமும் இந்தத் திடீர்ச் செயற்பாட்டில் உண்டு.

இயற்கைத் துறைமுக வளம் கொண்ட திருமலையை பெரும்பான்மை இனத்தவரின் தனி ஆதிக்கத்தின் கீழ் பலமாகக் கட்டி எழுப்பவேண்டும் என்ற பேரினவாதச் சூழ்ச்சியும் இதில் அடங்கியுள்ளது என்பதில் சந்தேகமில்லை.

இலங்கைத் தீவில் அமைதியை ஏற்படுத்தும் தமது நாட்டின் முயற்சிகள் ஸ்தம்பிதமடைந்து இருளார்ந்த நிலைக்குச் சென்றுவிட்டதை உணர்வதாக நோர்வேயின் வெளிவிவகார அமைச்சர் ஜோனஸ் ஹார்ஸ்ரோ மூன்று தினங்களுக்கு முன்னரே இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் தெரிவித்திருந்தார்.

அந்த மங்கல் தன்மை காரிருளாக மாறுவதற்கான ஏது நிலையை உண்டாக்கும் ஒரு முயற்சியே வடக்கு - கிழக்கு பிரிப்பும், திருமலை மாவட்டம் தனி அலகாக்கப்படும் திட்டமும்.

மஹிந்தா அரசின் இந்த முடிவு நாட்டின் அரசியல் நிலையை மேலும் மோசமாக்கிச் சீரழிக்கப்போகிறது!

# வடக்கு - கிழக்கு மாகாண சபை மூன்று நிர்வாக அலகுகளாகும்

## ஏற்பாடுகள் இப்போது துரிதகதியில்

திருகோணமலை, டிச. 25

வடக்கு - கிழக்கு மாகாண சபையை மூன்று நிர்வாக அலகுகளாகப் பிரிக்கும் செயற்பாடுகள் தற்சமயம் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்த அலகுகளை இயங்க வைக்கும் இடங்கள், அவற்றுக்கான ஆளணி மற்றும் கட்டட வசதிகள் குறித்து ஆராயப்பட்டு வருகின்றது.

வடக்கு அலகை வவுனியாவிலும் கிழக்குக்கான அலகை கல்முனையிலும் திருகோணமலை அலகை திருகோணமலை நகருக்கு வெளியே ஓரிடத்திலும் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இந்தப் அலகுகளுக்கான செயலாளர் களை விரைவில் நியமிக்க உள்ள தாகவும் அந்த பதவிகளுக்காக அதற்காகப் பலர் போட்டி போடுவதாகவும் கூறப்பட்டது.

புதிய நிர்வாக அலகுகள் அமைக்கப்பட்ட பின்னர், மாகாணசபை இப்போது இயங்கும் கட்டடங்களை உள்ளடக்கி வர்த்தக மையம் ஒன்றை அமைக்க அரசு திட்டமிட்டுள்ளதாகவும் - அறியவருகிறது.

வடக்கு கிழக்கு மாகாண ஆளுநராக கடமையாற்றி வந்த றியர் அட்மிரல் மொஹான் விஜெயவிக்கிரம கிழக்கு மாகாண ஆளுநராகவும் வடக்கு மாகாணபதில் ஆளுநராகவும் ஜனாதிபதி முன்னிலையில் பதவிப் பிரமாணம் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

(அ-1)

# ஆழிப்பேரலை அவலம் 2ஆம் ஆண்டை எட்டியும் இடைத்தங்கல் முகாம்களிலேயே வாழும் மக்கள்

## நிரந்தர வீடுகள் இன்னும் அமைக்கப்படவில்லை

உடுப்பிட்டி, டிசெ.25

ஆழிப்பேரலை இலங்கையின் கரையோரப் பிரதேசங்களில் பாரிய உயிர், உடைமை அழிவை ஏற்படுத்தி நாளை செவ்வாய்க்கிழமையுடன் 2 வருடங்கள் பூர்த்தியடைகின்றன. ஆயினும், யாழ். மாவட்டத்தில் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்கள் இடைத்தங்கல் முகாம்களிலேயே தொடர்ந்தும் வாழும் அவலநிலை ஏற்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கு, மணற்காட்டு மக்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேற்படி பிரதேசத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கென 186 வீடுகளை அமைத்துக் கொடுப்பதற்கென ஆரம்பகட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. ஆயினும் இதுவரை அவற்றுள் 16 வீடுகளே முழுமையாகக் கட்டிக்கொடுக்கப்பட்டுள்ளன.

(1 - 202)

## கடத்தப்பட்டவர் விடுதலை

கொழும்பு, டிச. 25

பாதுகாப்பு அமைச்சின் மூத்த ஆலோசகரான ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் எம்.டி.பெர்னான்டோவின் மகனான மயூரா பெர்னான்டோ வெள்ளிக்கிழமை இரவு 11.30 மணியளவில விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த வியாழக்கிழமை முதல் காணாமல் போயிருந்த இவர் 30 மணி நேரத்தின் பின்னர் கண்கள் கட்டப்பட்ட நிலையில் திம்பிரிகாசயா பம்பலப்பிட்டி டீ பொன்சேகா வீதியிலுள்ள தனது பாதுகாப்பு சேவை அலுவலகத்திலிருந்து உணவகம் ஒன்றிற்குச் சென்று கொண்டிருந்த வேளையில் வெள்ளை வானில் வந்தவர்களால் தான் கடத்தப்பட்டதாகவும் இரவு முழுவதும் அடையாளம் காண முடியாத பகுதியில் தங்க வைக்கப்பட் டிருந்ததாகவும் அவர் தெரிவித்தார்.

கடத்தல்காரர்கள் அவரது தந்தையாரான மேஜர் ஜெனரல் எம்.டி.பெர்னான்டோ தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டனர்.

(ஐ)



புதுடில்லியில் இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங்கைச் சந்தித்துவிட்டு சென்னை திரும்பியுள்ள தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நேற்று தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதியை சந்தித்துப் பேசினர். அப்போது எடுக்கப்பட்ட படம். (ஐ)

# சர்வதேச நாணய நிதியம் தனது கொழும்புப் பணிமனையை மூடுகிறது!

கொழும்பு, டிசம்பர் 25

இலங்கை நீண்ட காலமாக சர்வதேச நிதியத்துடன் இணைந்து நிகழ்ச்சித் திட்டங்களில் ஈடுபடாமல் இருப்பதால் சர்வதேச நாணய நிதியம், கொழும்பில் உள்ள அதன் வதிவிடப் பிரதிநிதிகளின் அலுவலகத்தை பெப்ரவரி முதலாம் திகதி மூடிவிடத் திட்டமிட்டிருப்பதாக 'சண்டே ரைம்ஸ்' ஆங்கில வார இதழ், நேற்றுச் செய்தி வெளியிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி லூயிஸ் வெல்டிவீஸோவின் பதவிக் காலம் பெப்ரவரி முதலாம் திகதி முடிவடைவதாகவும், முடிவடையும் அவரது பதவிக் காலத்தோடு வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தை மூடிவிடத் தீர்மானிக்கப்பட்டிருப்பதாகவும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இலங்கை சர்வதேச நாணய நிதியத்துடன் சேர்ந்து நீண்ட காலமாக எதுவித வேலைத் திட்டத்திலும் ஈடு படாததால் நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகத்தை மூடிவிட நிதியம் தீர்மானித்துள்ளது.

அத்தோடு நிதியத்தை மறுசீரமைப்புச் செய்யும் வேலைத் திட்டம் தொடர்வதும் இத்தீர்மானம் எடுப்பதற்கு மற்றுமொரு காரணமாகும் எனவும் நிதியம் தெரிவித்துள்ளது.

இது குறித்துக் கூறிய நிதியத்தின் வதிவிடப் பிரதிநிதி, கொழும்பிலுள்ள வதிவிடப் பிரதிநிதியின் அலுவலகம் மூடப்பட்டாலும் இலங்கை அபிவிருத்திக் கூட்டத்தில் நிதியம் பங்குபற்றும் என்றார். (இக்கூட்டம் 2005 ஆம் ஆண்டு மே மாதம் 16 மற்றும் 17 ஆகிய திகதிகளில் கண்டியில் இறுதியாக நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

நிதியம் அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் இலங்கையும், சர்வதேச நாயண நிதியமும் நெருக்கமான உறவைத் தொடரும் என்றும் வெளிப்படையான பேச்சுக்கள் நடைபெறும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு நிலையான பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கும், வறுமையை இல்லாதொழிப்பதற்கும், மேற்கொள்ள இருக்கும் முயற்சிகளுக்கு நிதியம் முழு ஆதர வையும் வழங்கும். அவை தொடர்பான கருத்துகளைப் பரிமாறிக் கொள்வதற்கும் நிதியத்தின் குழு தொடர்ந்து இலங்கைக்கு வரும் என வதிவிடப் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

(ஐ-07)

## நாளை

மார்கழி 11
செவ்வாக்கிழமை
26.12.2006
திதி : சஷ்டி
பிற்பகல் 12.22
நட்சத்திரம் : சதயம்
முற்பகல் 08.35
சுபநேரம் : 10.57 - 12.27
ராகுகாலம் : 03.27 - 04.57

# சட்டவிரோதமாக மின் இணைப்பு பெற்ற எழுவருக்கு ஒரு லட்சம் அபராதம்

தென்மராட்சி,டிசெ.25

சட்டவிரோதமாக மின்சார இணைப்புப் பெற்ற ஏழு பேருக்கு 1லட்சத்து 30ஆயிரம் ரூபா அபராதமாக விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி, தச்சன்தோப்பு, நாவற்குளி ஆகிய பகுதிகளில் சட்ட விரோதமாக மின்சாரம் பெற்ற வேளையில், கடந்த மாதம் 22ஆம் திகதி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டனர்.

இந்த நபர்களுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டு; விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இவ் வழக்குகள் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது இருவருக்கு தலா 25ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் தலா 20 மாத சாதாரண சிறைத்தண்டனையும்-

நால்வருக்கு தலா 15ஆயிரம் ரூபா அபராதம் விதித்து, அபராதத் தொகை செலுத்தத் தவறின் 10 மாத சாதாரண சிறைத்தண்டனையும்-

ஒருவருக்க 20ஆயிரம் ரூபா அபராதம் விதித்து அபராதத் தொகை செலுத்தத் தவறின் 15மாத சாதாரண சிறைத்தண்டனையும் விதிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு - கிழக்கு மூன்று அலகுகளாக பிரிக்கும் அரசின் முயற்சி இந்தியாவுக்குப் பெரும் சவால்!

## சமாதானத்துக்கு உதவாத கண்மூடித்தனமான செயல் என்கிறது தமிழ்க் கூட்டமைப்பு

கொழும்பு, டிசம்பர் 25

கிழக்கு மாகாணத்திற்கு மட்டும் தனியாக ஆளுநர் ஒருவர் நியமிக்கப்பட்டதையும், வடக்கு - கிழக்கு மாகாணத்தை மூன்று அலகுகளாகப் பிரிக்க அரசு முயற்சிகளை மேற்கொண்டு வருவதையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு வன்மையாகக் கண்டித்துள்ளது.

இந்த நடவடிக்கை அமைதி முயற்சிகளை வெகுவாகப் பாதிக்கும் என்றும், அரசு தீர்க்க தரிசனம், தூரநோக்கு போன்றவை இல்லாமல் கண்மூடித்தனமாகச் செயற்பட்டு வருகின்றது என்றும் அக்கட்சி குற்றஞ் சுமத்தியுள்ளது.

இதனால், தற்போதைய நிலைமை மேலும் மோசமடையும் அபாயகரமான சூழல் எழுந்துள்ளதாகவும், இது இந்தியாவுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

இதுபற்றி தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் 'உதயனு'க்குத் தெரிவிக்கையில், வடக்கு - கிழக்கைத் துண்டு துண்டாகப் பிரித்து அவற்றை வேறு மாகாணங்களுடன் இணைக்கும் நடவடிக்கையில் அரசு தற்போது ஈடுபட்டுள்ளது. அதற்கமைவாகவே மொஹான் விஜயவிக்கிரமவை அரசு கிழக்கின் ஆளுநராக நியமித்துள்ளது.

### கிழக்கைத் துண்டாடும் திட்டம்

வடக்கு - கிழக்கில் 70 வீதமான தமிழ் பேசும் மக்கள் வாழ்கின்றனர். வடக்கு - கிழக்கு நிரந்தரமாக இணைந்திருக்க வேண்டும் என்பதே அம்மக்களின் விருப்பம். ஆனால், சிங்கள அரசோ வடக்கு - கிழக்கில் தமிழர்களை விரட்டி விட்டு அம் மாகாணத்தைத் துண்டு துண்டாகப் பிரித்து வேறு மாகாணங்களுடன் இணைக்கும் நடவடிக்கையை மேற்கொண்டு வருகிறது.

வடக்கையும், கிழக்கையும், திருகோணமலையையும் தனி அலகுகளாகப் பிரித்து வடக்கின் நிர்வாக மையம் வவுனியாவிலும், கிழக்கின் நிர்வாக மையம் கல்முனையிலும், திருமலை நிர்வாகம் தலைநகரிலும் அமையும் எனத் தெரியவருகிறது.

### அரசு நில ஆக்கிரமிப்பு

முதலில் இந்த நிர்வாக அலகை இவ்வாறு பிரித்து அதனையடுத்து மட்டக்களப்பை பொலன்னறுவையுடனும், திருகோணமலையை அநுராதபுரத்துடனும் இணைக்கவே அரசு திட்டம் தீட்டியுள்ளது.

இதற்கமைவாக கிழக்கில் அரசு நில ஆக்கிரமிப்பை மேற்கொண்டு வருகிறது. திருகோணமலையிலுள்ள தமிழர்கள் மீது தாக்குதல் நடத்தி அவர்களை இடம்பெயரச் செய்து அந்த இடங்களை அரசு ஆக்கிரமித்து வருகிறது.

திருகோணமலை மாவட்டத்தின் இட ஒதுக்கீட்டில் தமிழ்பேசும் மக்களுக்குப் பாரிய அநீதி ஏற்பட்டுள்ளது. கிண்ணியாவில் உள்ள 75 சதவீதமான தமிழ் பேசும் மக்களுக்கு 5 வீத நிலப்பரப்பும், இத்தொகையில் அரைவாசி வீதம் கூட இல்லாத கந்தளாய் சிங்கள மக்களுக்கு 15 வீத நில ஒதுக்கீடும், சேருவிலவில் உள்ள 13 ஆயிரம் மக்களுக்கு 20 வீத நில ஒதுக்கீடும் வழங்கப்பட்டுள்ளன. தமிழ் பேசும் மக்கள் இதனால் இடவசதி இல்லாமல் அவதிப்படுகின்றனர்.

அதேபோல் மட்டக்களப்பு மாவட்டத்தில் கஜுவத்தையிலும் தொடர்ந்து ஷெல் தாக்குதல் நடத்தி அங்குள்ள மக்களை விரட்டியடித்து கஜுவத்தையை பொலன்னறுவையுடன் இணைக்க அரசு திட்டமிட்டுள்ளது.

### கஜுவத்தையில் ஷெல் வீச்சு நடத்துவதன் நோக்கம்

இவ்வாறு கிழக்கில் தாக்குதல் மூலம் மக்களை இடம்பெயரச் செய்து அவர்களின் நிலங்களை ஆக்கிரமிக்கும் நிர்வாக ரீதியான திட்டங்களை வகுத்தும் அரசு கிழக்கைத் துண்டாடி வேறு மாகாணங்களுடன் இணைக்கத் திட்டமிட்டுள்ளது.

இந்த நிலைமை, நிலையான சமாதானத்தை உருவாக்கவோ அது தொடர்பான அமைதிப் பேச்சுகளை நடத்தவோ வழிசமைக்காது. இது தற்போதுள்ள நிலைமையை மேலும் மோசமாக்கும்.

வடக்கு - கிழக்குப் பிரிப்பை நாம் விரும்பவில்லையென இந்தியா தெரிவித்துள்ளது. இந்நிலையில் அரசின் இந்த முயற்சியானது இந்தியாவுக்குப் பெரும் சவாலாக அமைந்துள்ளது.'' - என்றார். (ஐ)

## நள்ளிரவு

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

இத்திருப்பலியில் பக்தர்கள் ஆர்வத்துடன் பங்கேற்றனர்.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் நள்ளிரவுத் திருப்பலிகள் இடம்பெற்றன.

ஊரடங்கு நீக்கப்பட்டதால் மக்கள் இத் திருப்பலிகளில் கலந்துகொள்ள முடிந்தது என கிறிஸ்தவ மக்கள் தெரிவித்தனர்.

## ரணில் விக்கிரமசிங்கவின் பாதுகாப்பு அதிகரிப்பு

கொழும்பு, டிசெ.25

வெளிநாட்டுப் பயணத்தை முடித்துக் கொண்டு கொழும்பு திரும்பிய ஐக்கிய தேசியக்கட்சித் தலைவரும், எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கரமசிங்கவின் பாதுகாப்பை அரசு அதிகரித்துள்ளது.

கடந்த மாதம் மாவீரர் நாள் உரையை நிகழ்த்திய விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன், சமாதான காலத்தில் ரணில் தம்மைத் தனிமைப்படுத்தியதாகக் குற்றம் சாட்டியிருந்தார். இதனால், ரணிலின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக அரசு அவருக்குத் தெரிவித்துள்ளது.

ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஏற் பட்டுள்ள அச்சுறுத்தல், லலித் அத்துலத் முதலிக்கு ஏற்பட்டது போன்றது என ஜனாதிபதி செயலக வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

நாட்டில் ஒரு நெருக்கடி நிலைமையை ஏற்படுத்தி ரணில் விக்கரமசிங்கவைத் தாக்க விடுதலைப் புலிகள் எத்தனிப்பதாகவும், இதன் பொருட்டே பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன. (ஐ-03)

## பாதாள உலக உறுப்பினர்கள் மூவர் கைது

கொழும்பு - முகத்துவாரம் - திம்புவாகவலப் பகுதியில் நேற்றுமுன்தினம் மாலை பொலிஸார் நடத்திய தேடுதலில் பாதாள உலக உறுப்பினர்கள் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று போதைப் பொருள் தடுப்புப் பொலிஸின் சிரேஷ்ட அத்தியட்சகர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தத் தேடுதல் நடவடிக்கையில் சுமார் 130 பொலிஸார் ஈடுபட்டிருந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது. இந்தத் தேடுதலின்போது ஹெரோயின் மற்றும் கஞ்சா போன்ற போதைப்பொருள்களை வைத்திருந்த வேறு 9 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர். இவர்களை நீதிமன்றப் பிடிவிறாந்துடன் தொடர்புடைய 7 நபர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். அதிகரித்துவரும் போதைப்பொருள் கடத்தல் நடவடிக்கையை கட்டுப்படுத்தும் நோக்கிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என போதைப்பொருள் பிரிவு சிரேஷ்ட பொலிஸ் அத்தியேட்சகர் மேலும் தெரிவித்தார். (ஐ -3)

# மரண வீட்டினுள் புகுந்து சூடு! இருவர் பலி! அறுவர் காயம்!!

## மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் கொடூரம்

ஏறாவூர், டிச. 25

மட்டக்களப்பு - புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் மரண வீடொன்றுக்குள் புகுந்த ஆயுதபாணிகள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் இரண்டு பேர் அந்த இடத்திலேயே கொல்லப்பட்டனர். மேலும் ஆறுபேர் படுகாயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித் தனர்.

புதுக்குடியிருப்பு பகுதியைச் சேர்ந்த நவரத்தினம் - சிவனேந்திரன் (வயது -23) மற்றும் தாளங்குடாவைச் சேர்ந்த செல்லத்தம்பி முனசிங்கம் (வயது-31) ஆகியோரே இச்சம்பவத்தில் கொல்லப்பட்டுள்ளனர்.

காயமடைந்தவர்கள் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். இவர்களில் ஐவரின் நிலை கவலைக்கிடமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

நேற்றுமுன்தினம் (சனிக்கிழமை) இரவு 11 மணியளவில் இச்சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் காலமான சின்னவன் - சவுந்தரம் என்பவரின் மரண வீட்டில் இருந்தவர்கள் மீதே இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. மேலதிக புலன் விசாரணைகளை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ-157)

## அமரர் ....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

மிளிர்ந்த இவர் இறுதிவரை தமிழ் மண்ணிலும், மக்களிலும் பற்று மிகுதியுடன் வாழ்ந்தார். ''தமிழருக்கு நிரந்தர தமிழீழ தாயகம் விரைவிலே மலரும்'' எனவும் ''மறுபிறப்பொன்றென்று இருக்கு மானால் மீண்டுமொரு தமிழ னாக தமிழீ ழத்தில் பிறக்க ஆசைப்படுகின்றேன்'' எனவும் மேல் நாடொன்றிலிருந்து கடை சிவரை உரைத்த அவரது தேசபக்திக்கு சிரம் தாழ்த்துகின்றோம். என்று விடுத லைப் புலிகள் நாட்டுப்பற்றாளர் கௌரவம் வழங்குவது தொடர்பாக விடுத்த அஞ்சலியில் தெரிவித்துள்ளனர். (அ)

## இந்தியாவிலுள்ள.....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

டுத்தினார்.

'றொய்ட்டர்' உட்பட சில செய்தி ஏஜென்ஸிகளுடனும் கப்டன் கிளிநொச்சியில் இருந்தவாறு தொலைபேசியில் பேசினார். ''நாங்கள் இங்கு மிகவும் பாதுகாப்பாக இருக்கிறோம். இங்கு எங்களுக்கு நல்ல ஒத்துழைப்பு இருக்கிறது. எங்களுக்கு உறங்குவதற்கு நல்ல இடம் கொடுக்கப்பட்டிருக்கிறது'' என்று செய்தி ஏஜென்ஸிகளிடம் கப்டன் தெரிவித்தார்.

''எமது சக உறுப்பினர்கள் (மாலுமிகள்) கிளிநொச்சி என்ற இடத்துக்குச் சென்று பொருட்களைக் கூட கொள்வனவு செய்திருக்கின்றனர்'' என்றும் அவர் சொன்னார்.

இதேவேளை - 25 மாலுமிகளும் அவர்களது குடும்பத்தினருடனும் தத்தமது நாடுகளின் அதிகாரிகளுடனும் உரையாடுவதற்கும் விடுதலைப் புலிகள் தொலைபேசி வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்திருந்தனர்.

செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் கிளிநொச்சி மாவட்டத் தலைவர் கட்ஷா லோறன்ஸ் அம்மையார் நேற்றுப் புலிகளின் சமாதானச் செயலகத்தில் குறித்த மாலுமிகள் 25 பேரையும் சந்தித்து உரையாடினார்; அவர்களின் நலன்களை விசாரித்தார். (த)

## பயண அனுமதி...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

நடைபெற்று வருகின்றன. பெரும்பாலும் நாளை அவை பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படும். நாளை மறுதினம் தொடக்கம் பிரதேச செயலகங்களில் அந்தப் படிவங்களைப் பெறலாம்.

படிவங்களைப் பூர்த்தி செய்து கிராம சேவையாளர் மற்றும் பிரதேச செயலரின் சிபார்சுடன் அந்த அந்தப் பிரதேச சிவில் நிர்வாக அலுவலகத்தில் கையளிக்க வேண்டும். பின்னர் அனுமதியை அதே அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம் - என்றும் அரச அதிபர் தெரிவித்தார். (அ-1)

## முல்லை...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

மாறு விடுதலைப் புலிகளை வற்புறுத்திக் கேட்டிருக்கும் இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு, கப்பலையும், அதன் மாலுமிகளையும் பாதுகாப்பாக மீட்பதற்காக அரசு மீட்புக் குழு ஒன்றை அனுப்பத் திட்டமிட்டிருக்கிறது எனவும் அரசின் இந்த நடவடிக்கைக்குத் தாமதியாது ஒத்துழைப்பு வழங்குமாறும் விடுதலைப் புலிகளுக்குக் கண்டிப்பான ஆலோசனை வழங்கியுள்ளது என்றும் 'றொய்ட்டர்' செய்தி நிறுவனம் நேற்று நண்பகல் அறிவித்தது. எனினும், மீட்பு அணி ஒன்றை முல்லைத் தீவுக் கடலுக்கு அனுப்புவது தொடர்பாக அரசு எடுத்து வரும் முயற்சிகள் தொடர்பாக விடுதலைப் புலிகள் தரப்பில் இருந்து எந்தவித. கருத்துகளையும் உடனடியாகப் பெற்றுக்கொள்ள முடியவில்லை.

ஜோர்தான் மற்றும் எகிப்து நாடு களைச் சேர்ந்த 25 மாலுமிகளையும் பத்திரமாக விடுவிப்பதற்குத் தாங்கள் தயார் என்றும், அவர்களது பயணத்துக்கு அனுசரணை அளிக்கு மாறு செஞ்சிலுவைச் சர்வதேசக் குழு விடம் கேட்டிருக்கின்றனர் என்றும் விடுதலைப் புலிகள் தெரிவித்திருக்கின்றனர். (ஐ)

## தெஹிவளை...

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

கைது செய்யப்பட்ட நான்கு நபர்களும் புத்தூர், அச்சுவேலி மற்றும் கடுவல போன்ற பகுதிகளைச் சேர்ந்தவர்கள் என்று தெஹிவளைப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் மேலதிக விசாரணைக்காகப் பயங்கரவாத தடுப்புப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர். (ஐ)

## திருகோணமலை....

(முதலாம்பக்கத்தொடர்ச்சி)

அட்மிரல் மொஹான் விஜயவிக்கிரம ஜனாதிபதி முன்னிலையில் கடந்த வெள்ளியன்று பதிவிப்பிரமாணம் செய்தார்.

வடக்கு மாகாண சபையின் பதில் ஆளுநராகவும் அவரையே ஜனாதிபதி நியமித்துள்ளார். அவர் பதவி ஏற்ற மறுநாள் மாகாண சபை பிரதம செயலருக்கு விடுத்த அறிவுறுத்தலில் -

23 ஆம் திகதி தொடக்கம் வடக்கு மாகாண சபை நிர்வாகமும், கிழக்கு மாகாணசபை நிர்வாகமும் தனித்தனியாக இயங்க ஏற்பாடு செய்யுமாறும் -

வடக்கு - கிழக்கு மாகாணசபை என்ற கடித தலைப்புகளையோ, கோவைகளையோ பயன்படுத்த வேண்டாம் என்றும் - அறிவுறுத்தல் விடுத்தார்.

தற்சமயம் பணிபுரியும் ஆளணியினரைக் கொண்டு இரு மாகாண சபைகளுக்கும் தனித்தனியான அலுவலக அமைப்புகளை உருவாக்கி இயக்க வேண்டும் என்றும் அறிவித்துள்ளார்.

ஆளுநரின் அறிவுறுத்தலின் பிரகாரம் அலுவலகங்களைச் செயற்படுத்த பிரதம செயலாளர் அலுவலகத்தினரும் ஆளுநர் அலுவலகத்தினரும் ஏற்பாடுகளை செய்து முடித்துள்ளனர் என்று நேற்றிரவு கிடைத்த தகவல் ஒன்று தெரிவித்தது.


A/L 2009

கலைப்பிரிவு

வர்த்தகப்பிரிவு

விஞ்ஞானப்பிரிவு

ஆரம்பம் :06.01.2007

சனி காலை 9 a.m.

இன்று முதல் அனுமதிகள் வழங்கப்படும்.

யூனிவேர்சல்

(யாழ் இந்து மகளிர் கல்லூரி அருகில்)



இலவசக் கணினிக் கருத்தரங்கு

2006 O/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்களே!

முன்னணி விரிவுரையாளர்கள் இணைந்து மாபெரும் கணினிக் கருத்தரங்கு ஒன்றை நடாத்தவுள்ளோம். எனவே அனைத்து மாணவர்களும் இக்கருத்தரங்கில் பங்கு பற்றி பயனடையுமாறு அன்புடன் அழைக்கிறோம்.

காலம் :- 01/01/2007 (திங்கட்கிழமை) 9.30 a.m

இடம் :- CB கணினி நிறுவன விரிவுரை மண்டபம் கோண்டாவில்

முந்துங்கள்!

கருத்தரங்கில் பங்குபற்ற விரும்பும் மாணவர்கள் அனைவரும் 30ஆம் திகதிக்கு முன்னர் பதிவுகளை மேற்கொள்ளவும்.

CB Computer Academy

T.P.No.021 4590291 Station Road, Kondavil.


## மரண அறிவித்தல்

### திருமதி பிறைசூடி சரஸ்வதி

கோண்டாவில் வடக்கைப் பிறப்பிடமாகவும் உரும்பிராய் மேற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பிறைசூடி சரஸ்வதி நேற்று (24.12.2006) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பிறைசூடியின் அன்பு மனைவியும் பகவதி, அருமைத்துரை, சரோஜாதேவி ஆகியோரின் தாயுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (25.12.2006) திங்கட்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோண்டாவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

சிவகுல் வீதி,
உரும்பிராய் மேற்கு, உரும்பிராய்.

தகவல்:
குடும்பத்தினர்.

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன்'(பிறைவேற்) லிமிற்றெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 25.12.2006இல் அச்சிட்டுவெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org